385

THE "VAKIL"—TAMIL LAW MAGAZINE—FOR THE CITIZEN

"வக்கீல்"

OFFICE OF THE REGISTRAR OF ...
1 MAY ...
MADRAS

385
2.5.52

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

இந்த இதழில்

தராதருத்த கைகள்

வியாபாரிகள் கடன் நிவாரணச் சட்டம் வேண்டும்

தொழிலாளர் சேமிப்பு நிதிச் சட்டம்

விற்பனை வரி விதி திருத்தம்

இந்துமத - தர்ம பரிபாலனச் சட்டத்தின் செல்லாத ஷரத்துக்கள் விபரம்

நீதிபதிக்குக் கடிதம் எழுதியவர் வழக்கு

தாய் வீடு சென்ற மனைவி

கேள்வி—பதில்

மற்ற விபரம் உள்ளே பார்க்கவும்

தமிழ் சட்டப் பத்திரிகை

(மாத வெளியீடு)

THE "VAKIL" ~ ஏப்ரல்-1952 ~ 6 அணா

V. S. & Sons

SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்
பெப்பர்மெண்டுகள்

தயாரிப்பவர்கள்:

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை
கும்பகோணம்

(Estd. 1925)

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர மாத சட்ட வெளியீடு

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
" G. வரதராஜ பத்தர், B. A., B. L.,
" V. தியாகராஜன், B. A., B. L.,
" A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
" S. சாம்பசிவய்யர் B. A., B. L.
" T. S. வெங்கடராமன் B. A., B. L.,
" R. கிருஷ்ணமாச்சாரி, B. A., B. L.
" R. கோபாலசாமி, B. A., B. L.,
" C. R. வீரராகவன், M. A. B. L.
" R. கிருஷ்ணமூர்த்தி B. A., B. L.,
" P. சுந்தரேசய்யர் B. A., B. L.,
" V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L., (ஆசிரியர்)

1952 ஜனவரி முதல் "வக்கீல்" சந்தா விபரம்.

புதிய சந்தா விபரம்:— தனிப் பிரதி அணா 6. வருட சந்தா ரூ. 5. விசேஷ வருட சந்தா ரூ. 9. ஷை வெளிநாடு ரூ. 10. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதாரர்கள் கவனிக்கவும்:— 1952 ஜனவரி முதல் "வக்கீல்" அதிகப் பக்கங்களுடனும், பல முக்கியமான பகுதிகளுடனும், வெளி வருவதால் "வக்கீல்" சந்தா மேலே கண்டபடி திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. 1952 ஜனவரி இதழ் முதல் புதிய சந்தா விகிதப்படி கணக்கு செய்து "வக்கீல்" இதழ்கள் அனுப்பப்படும். 1951 டிசம்பர் மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தவர்களுக்கும் புதிய சந்தா விகிதப்படிக்குள்ள சந்தாதான் கணக்கு செய்யப்படும். வருஷ சந்தாதாரர்களுக்கு 12 மாத இதழ்களும், அந்த வருடத்திய பொருள் அட்டவணையும் அனுப்பப்படும். விசேஷ வருட சந்தாதாரர்களுக்கு மேற்கண்டவை அனுப்புவதுடன் அவ்வருடத்திற்குள் "வக்கீல்" சப்ளிமெண்டுகளாக பிரசுரமாகும் 3 சட்ட புத்தகங்களும் அனுப்பப்படும். ஆயுள் சந்தாதாரர்கள் இனி சந்தா கட்டவேண்டியதில்லை. அவர்களுக்கு மேற்கண்டவை எல்லாம் அனுப்பப்பட்டுவரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—

மானேஜர், "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26 :: கும்பகோணம்
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 4 ஏப்ரல் 1952 இதழ் [illegible]

MAY 1952 MADRAS

பொருள் அடக்கம்

பக்கம்

குறிப்புகளும் - செய்திகளும்
தருதறுத்த கைகள் 3
வியாபாரிகள் கடன் நிவாரணச் சட்டம் வேண்டும் 4
கூக்குரல் யாருடையது? 5
புதிய சட்டங்கள்
1952ஆம் வருடத்திய 1 முதல் 19 வரை உள்ள (மத்திய) சட்டங்கள் 6
ஹைகோர்ட் நீதிபதிகளின் எண்ணிக்கை நிர்ணயம் 9
தொழிலாளர் சேமிப்பு நிதிச் சட்டம் 10
கண்ட்ரோல் லைசென்ஸ் முதலியவை 11
வரிகள் 13
தொழிலாளர் பகுதி
ஷாப் சட்ட விதி விலக்குகள் 15
தொழிற்சாலைச் சட்ட விதித் திருத்தம் 15
அறநிலையப் பாதுகாப்புச் சட்ட விதிகள் 16
வழக்கும் - தீர்ப்பும்
* தாய்வீடு சென்ற மனைவியை அடைய ஹைகோர்ட்டுக்குப் புருடனின் மனு 18
* ஷிருர் மடத்தைப் பற்றிய சென்னை ஹைகோர்ட் தீர்ப்பு. இந்து மத தர்ம பரிபாலனச் சட்டத்தில் செல்லாத ஷரத்துக்களின் விபரம் 19
* கோர்ட்டில் நடக்கும் ஒரு வழக்கைப் பற்றி நீதிபதிக்குக் கடிதம் எழுதிய கிராமப் பஞ்சாயத்தார்கள் தண்டிக்கப் பட்டனர் 19
* போதக்கடனை திருப்பிக் கொடுப்பதில் ஏற்பட்ட வழக்கு 20
* ஒரு தடவை பாகப் பிரிவினை செய்து கொண்டு, அதை ரத்து செய்து மறுபடியும் பிரிவினை செய்து கொள்ள முடியுமா? 22
கேள்வியும் - பதிலும் 24
சென்னை கிராம பஞ்சாயத்துச் சட்டம் 28

187717

நாகரீக நூதன பார்டர்களில்
கண்ணைக் கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள

பட்டு ஜவுளி தினுசுகள்

குறைந்த விலையில் கியாரண்டியுடன்
கிடைக்குமிடம்

ராணி ரெங்கய்யர் சன்ஸ்

கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு:—
20, லக்ஷ்மிபுரம் 2-வது தெரு,
மதுரை

பெங்களூர்
காஞ்சீபுரம்
கும்பகோணம்
பட்டுச் சேலைகள்
நூதன பார்டரில்
ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்.

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சுகள்:—
காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

உ

முற்று மாசரிமை மூவாது நம் மனோர் பெற்று சுகவாழ்வு பெற டைக—மற்றும் வளம்பெருக வான் சொரிய மன்பதைகள் ஓங்க அளவின்றி பல்க அறம்.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி தேவி
அனுக்கிரஹத்தால்

"ஆருடத்தின் மஹிமை"

உங்கள் எதிர்காலத்தைப் பர்றி பூரா ஜாதக நகலுடன் அல்லது கடிதம் எழுதும் நேரத்துடன் நியாயமான 7 கேள்விகள் எழுதி ரூ. 2/- அனுப்பினால் உங்கள் எதிர்கால உண்மைச் செய்தி உங்களை விரைவில் தேடிவந்தடையும்.

1952-ம் வருஷ மாதவாரி பலாபலன்
குணநிசய பலன் ஆயுள் பூராவும்

பலாபலன் வேண்டியவர்கள் பூரா ஜாதக நகலுடன் அல்லது ஜனன கால வருஷம், மாதம், தேதி அல்லது சுமார் வயதுடன் எழுதி ரூ. 3/- மணியார்டர் அனுப்பினால் மேற்கண்ட பலாபலன் மறு தபாலில் எழுதி யனுப்பப்படும்.

திசா புக்தி பலன்

எந்தத் திசையானாலும், எத்தனை வருஷ திசையானாலும், திசை பூராவிற்கும் 9 புக்திக்கும் விபரமாய் பலாபலன் எழுதி யனுப்பப்படும். தேவையுள்ளவர்கள் பூரா ஜாதக நகலுடன் ரூ. 10/- மணியார்டர் மூலம் அனுப்பவும்.

N.B.:-வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகைக்கு பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் வாங்கி யனுப்பவும்.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்
கோட்டமருதூர் - அரகண்டநல்லூர் P. O.
தெ. ஆ. ஜில்லா.

வெண்சங்கு நறுமண

குணம்
மணம்
சுத்தம்
ஆரோக்கியம்
சிக்கனம்
உடையது.

நறுமண சீயக்காய்த்தூள்
REGD. No. 13817.

உரிமை:
S. பெத்தண்ண நாடார்
.. கீழவாசல்–தஞ்சாவூர்..

சீயக்காய்த் தூள்

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 4 ஏப்ரல் 1952 இதழ் 4

குறிப்புகளும் - செய்திகளும்

துறுதுறுத்த கைகள்

**"செந்தமிழ் நாடெனும் போதினிலே-இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே!—"**

—ஆனால் இவ்விதத் தேன் இனி உங்கள் காதில் அதிகமாகப் பாயாமல் நமது சென்னை மந்திரிகள் பார்த்துக் கொள்வார்கள். அதற்காக ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

**"ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா."**

—என்ற இனிய கீதத்தை உங்கள் குழந்தைகள் பாடப்புத்தகங்களிலிருந்து மழலைச்சொற்களால் படித்துப் பாடுவதையும், ஆடுவதையும் கண்டு இனி நீங்கள் அதிகமாகக் களிக்கமுடியாது. அதையும் நமது சென்னைச் சர்க்கார் கண்கொட்டாமல் கவனித்து வருவார்கள்.

**"தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்,
ஜகத்தினை அழித்திடுவோம்."**

—என்று பட்டினியால் (சினிமாவில்) சாகும் மக்கள்கூட இனி, தாராளமாய்ப் பாடமுடியாது. நீங்கள் ரஸ்தாவில் நடந்து கொண்டிருக்கும் போது "சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா!" என்ற கிராமபோன் பிளேட்டுக்களை நீங்கள் ரசித்து அதற்கு ஒத்தபடி தாளம் போட்டு நடப்பது இனி முடியாது. ஏனென்றால் இவைகள் எல்லாம் மகாகவி பாரதியாரின் பாடல்கள்.

*

பாரதியார் இறந்த பிறகு அவருடைய வார்சுகளிடமிருந்து பாரதியாரின் பாடல்கள் முதலிய நூல்களின் உரிமைகளை எல்லாம் நமது சென்னைச் சர்க்கார் விலைக்கு வாங்கி விட்டனராம். இனி இப்பாடல்கள் சென்னைச் சர்க்காருக்கு மட்டில் உரிமையுள்ள சொத்தாகி விட்டனவாம். அந்த உரிமையைக் கண்காணிக்கும் முறையையில், சென்னைச் சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். இனி, பாரதியாரின் பாடல்களைச் சினிமாவில் உபயோகிப்பதற்கும் சரி, கிராமபோன் பிளேட்டில் பாடுவதற்கும் சரி, குழந்தைகளின் பாடப் புத்தகங்களில் அச்சடிப்பதற்கும் சரி—அதற்காக ஒரு கட்டணம் கட்டி முன்கூட்டியே சென்னைச் சர்க்காரின் அனுமதி வாங்கிக் கொள்ள வேண்டும் என்று பொது மக்களைச் சென்னைச் சர்க்கார் அவ்வறிக்கை மூலம் எச்சரித்திருக்கின்றனர்.

*

'கண்ட்ரோல்'களில் விளையாடிய கைகள் துறுதுறவென்றிருக்கிறது போலும்! இனி, 'கண்ட்ரோல்' செய்யவும், கட்டுப்பாடு உத்தரவுகள் விடுவிக்கவும் சரக்குகள் இல்லை. ஆனால் அதற்காக ஏன் நமது மந்திரிகள் சும்மா இருக்க வேண்டும்? இன்னும் கட்டுப்பாடு செய்ய வேண்டிய எவ்வளவோ விஷயங்கள் சமுத்திரமாகக் கிடக்கின்றனவே! முதல் முதலாக "அறிவு — உணர்ச்சி — தேசியம்" என்ற பொருள்களைக் கட்டுப்படுத்த, சென்னை மந்திரிமார்கள் ஆரம்பித்திருக்கின்றனர் போலும்!

*

பாரதியார் தமிழகத்தின் செல்வப் புதல்வரானாலும், அவர் ஆயுள்காலம் வரை அவர் பிறந்த இடங்களில் அவர் புக முடியாமல் ஆங்கில சர்க்கார் அவரை விரட்டிவிட்டது. பாரதியார் பிரஞ்சு ராஜ்யத்திற்கு ஓடி அங்கே தான் அஞ்ஞாதவாசம் செய்தார். அவர் புதுச்சேரியில்தான் வெகு நாட்கள் வசித்து வந்தார் என்பதும், அவருடைய பாடல்களில் பெரும்

பகுதி புதுச்சேரியில்தான் முதல் முதல் பிரசுரம் செய்யப்பட்டன என்பதும் பிரசித்தமான விஷயங்கள்.

*

இரண்டொரு சட்ட விஷயங்களைச் சென்னைச் சர்க்கார் ஆராய்ந்த பிறகு இவ்விதக் கட்டுப்பாடுகளில் விளையாடுவது உசிதமாகும்.

முதலாவதாக, அரசியல் அமைப்பின்படி, ஒரு நூலாசிரியரின் நூல் உரிமைகளை விலைக்கு வாங்க ஒரு ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரமுண்டா? இரண்டாவதாக, 'காபிரைட்' என்ற நூல் உரிமைச் சட்டப்படி அயல் நாடுகளில் முதல்முதல் பிரசுரம் செய்யப்பட்ட நூல்களுக்கோ, அன்னிய நாட்டில் வசித்து வந்தவரால் அங்கு எழுதப்பட்டுப் பிரசுரம் செய்யப்படாமலிருந்த நூல்களுக்கோ, இந்தியச் சட்டப்படி காபிரைட் என்ற பதிப்புரிமை அல்லது நூல் உரிமை கிடையாதென்று, அச்சட்டத்தின் ஆரம்பத்திலேயே இருப்பதையும் நமது சர்க்கார் ஆராய்ந்து, புதுச்சேரியில் முதல்முதல் பிரசுரம் செய்யப்பட்ட பாடல்கள் எவை என்று தெளிவுபடுத்த வேண்டும். மூன்றாவதாக, பதிப்புரிமை இருக்கும் நூல்களையும் மாணவர்கள் பாடப் புத்தகங்களுக்காக உபயோகப்படுத்துவது பற்றிய ஒரு விதி விலக்கும் அச்சட்டத்திலேயே இருக்கிறது. இதையும் சர்க்கார் கவனிப்பது நலம். இச்சட்ட விஷயங்களை எல்லாம் ஆராய்ந்தும தாங்கள் கொண்டாடும் பாத்தியம் சட்ட பூர்வமான ஓர் உரிமைதான் என்று நமது மந்திரியார்களுக்குத் தோன்றினால், பிறகு சட்ட சம்பந்தமில்லாத ஓர் விஷயத்தையும அவர்கள் கவனிக்கவேண்டும். பாரதியாரைத் தமிழகத்தில் வசிக்க, முன்பு இருந்த சர்க்கார் விடவில்லை; இப்பொழுது இருக்கும் சர்க்கார், பாரதியார் இறந்துவிட்டபடியால், அவருடைய பாடல்களைக் கூடத் தமிழகத்தில் பரவ விடவில்லை—என்ற பழியைத் தடுக்க நமது மந்திரிகள் முயற்சி செய்யவேண்டும்.

பாரதியாரின் பாடல்கள் தமிழகத்தின் பொது உடைமைச் சொத்தாகும். உயிருடன் இருந்து, வறுமையில் வாடி, பசியில் பாடிய பாரதியாரைத் தமிழகத்திற்கு அவ்வளவாகத் தெரியாது. ஆனால் பாரதியார் வைத்துப் போன தெய்வீக ஆஸ்திகள், அவர் எழுப்பிய உணர்ச்சிகள், அவர் கண்ட கனவுகள், அவர் செய்த வீர முழக்கங்கள் எல்லாம் தமிழகத்தின் சொத்தாகும்.

வியாபாரிகள் கடன் நிவாரணச் சட்டம் வேண்டும்.

வியாபாரம் மேலே ஏறுவதும் கீழே இறங்குவதும் அந்தந்த வியாபாரியின் சாமர்த்தியம், ஊக்கம், தொழில்முறை இவைகளையே பெரும்பாலும் பொறுத்ததாக இருந்தாலும், 'விலைச் சுழல்' என்பதற்கும் அதில் ஒரு முக்கியப் பங்கு உண்டு. 'விலைச் சுழல்' என்பது எப்பொழுது தோன்றினாலும் சரி, அது சிலருக்கு மிக நன்மையையும், சிலருக்கு மிகக் கெடுதியையும் விளைவிக்கக் கூடியது. கையில் சரக்கு இருந்து விலைவாசிகள் குபீர் என்று ஏறினால், அவ் வியாபாரிக்கு எதிர்பாராத அதிர்ஷ்டம் ஏற்படுகிறது. அதைப் போலவே, கையில் சரக்குத் தங்கி இருக்கும் போது, விலை வாசிகள் திடீரென்று தலைகுப்புறக் குறைந்துவிட்டால், அவ்வியாபாரி எதிர்பாராத நஷ்டத்தை அடைகின்றார். இச்சுழலை முன்கூட்டியே அறிந்து கொண்டு, அதன்படி தம் விஷயங்களை ஒழுங்குபடுத்தக் கூடியவர்கள் மிகமிகச் சிலரே.

*

விலைவாசிகள் ஏறிக் கொண்டே இருக்கும் போது, எந்த வியாபாரிக்கும் நஷ்டம் ஏற்படாது; எவரும் லாபத்தையே அடைகிறார். அப்பொழுது பெரிய வியாபாரிகள், நடுத்தர வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள் எல்லோரும் அடையும் லாபம் முழுமையும் ஈவு இரக்கமின்றி, பொதுமக்களின் தலை மீதே சுமத்தப்படுகிறது. பொது மக்களின் தவிப்பையோ, நஷ்டத்தையோ கவனிக்க பணத்தை எண்ணும் வியாபாரிகளுக்கு நேரமில்லை.

வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு இப்படிப் பொதுமக்கள் தவிப்பது இயற்கையாகவே தோன்றியது. கையில் இருக்கும் சரக்குகளை இல்லை என்று சொல்வதே வியாபார முறையின் அரிச்சுவடியாகப் பாவிக்கப்பட்டது.

*

ஆனால் விலைவாசிகள் இறங்கும்போது அப்படி அல்ல. பொதுமக்கள் இதனால் நன்மை அடைந்தாலும், வியாபார சமூகத்தில் ஒரு குழப்பம் ஏற்பட்டு விடுகிறது. விலை இறங்கும்போது எந்த வியாபாரியிடம் சரக்குகள் தங்கி நிற்கின்

றனவோ அவர்கள் தான் சட்டப்படி நஷ்டத்தை பொறுத்துக்கொள்ள வேண்டும். இச்சமயங்களில்தான் வியாபார சமூகத்தினருக்குள் சச்சரவுகள் ஏற்படுகின்றன. விலை குறைந்த சரக்குகளை 'நான் இன்னும் முடிவாக வாங்கவில்லை' என்று ஒரு சாரார் சொல்லுவதும்; 'அச்சரக்குகளை நான் உங்களுக்கு அன்று தினமே விற்றுவிட்டேனே; அச்சரக்குகள் உங்களுடையனவே' என்று ஒரு சாரார் சொல்லுவதும்; ஒப்பந்தங்கள் மறுக்கப்படுவதும்; தட்டிக் கழிக்கப்படுவதும்; ரயிலடியில் சரக்குகள் 'டெலிவரி' எடுப்பாரற்று குவிந்து கிடப்பதும்; நோட்டீசுகளும் பதில் நோட்டீசுகளும் தந்திகளும் பதில் தந்திகளும்; கோர்ட் விவகாரங்களும்; இன்சால்வென்சி மனுக்களும் கூட விலைக் குறைவு ஏற்படும் போது மலிந்து கிடக்கும் சரக்குகளாகும்.

*

இனி பொது மக்களாகிய நீங்கள் உங்கள் தொழிலையும் அலுவல்களையும் விட்டுவிட்டு, மிளகாய் வற்றல் வாங்குவதற்கும், கொத்தமல்லி விதை வாங்குவதற்கும் மில் துணி வாங்குவதற்கும், நடு ரஸ்தாவில் 'க்யூ' வரிசையில் நிற்க வேண்டாம். பேசாமல் வீட்டிலேயே உட்கார்ந்திருங்கள். அச்சரக்குகள் உங்களைத் தேடி வந்து உங்கள் தயவுக்குக் காத்திருக்கும் சமயம் வந்துவிட்டது. உங்களுக்குக் கொண்டாட்டம் தான்.

*

ஆனால் அது வியாபார சமூகத்தின் திண்டாட்டமாகும். பண்டங்களை அமுக்கி, கள்ள மார்க்கெட்டில் விற்று, லாபத்தைக் கணக்கில் காண்பிக்காமல் சர்க்காருக்கும் வரி கொடுக்காமல் ஏமாற்றிய அதே வியாபாரிகள் இப்பொழுது இவ்விலைச் சுழலில் மாட்டிக்கொண்டு நொடிந்து விழுந்தால் அதை ஒருவரும் கவனிக்க வேண்டியதில்லை. மக்களுடைய வயிற்றெரிச்சலே இப்படிச் செய்ததென்று பொது மக்களுக்கு ஒரு மனத் திருப்திகூட ஏற்படும்.

ஆனால் அப்படி நடப்பதில்லை. வியாபாரச் சமூகமே, நல்லவர் கெட்டவர் என்ற பாகுபாடு இல்லாமல் பாதிக்கப்படும் இச்சமயத்தில், அவர்களுக்குத் தாமதமின்றிப் பரிகாரம் அளிப்பதும் அவர்கள் கொடுக்கவேண்டிய கடன்களுக்கு நிவாரணமளிப்பதும் நமது சட்டசபைகளின் கடமையாகும். அனுகூலம் அடைய லாயக்கில்லாத கைதேர்ந்த கள்ளமார்க்கெட் பதுக்கல் வியாபாரிகளை அதில் ஒதுக்கிவிட ஷரத்துக்கள் சேர்த்துவிடலாம். இது அசாத்தியமல்ல.

விவசாயிகள் வாங்கிய கடன்களுக்கு எப்படிப் பரிகாரம் அளிக்கப்பட்டதோ அதைப்போலவே இப்பொழுது வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் ஒரு சட்டம் ஏற்படுத்தலாம். எந்த எந்த வியாபாரிகள் அனுகூலங்கள் அடைய லாயக்கற்றவர்கள் என்றும், விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தில் இருப்பது போலவே, சிலரை அடையாளத்தின் பேரில் கண்டுபிடிக்க விதிகள் செய்யலாம். இது மிக அவசியமே. இதுதான் வழி. அப்படி இல்லாமல், விலைவாசிகளை மறுபடி ஏற்றவேண்டுமென்று ஒரு குரல் கேட்கின்றது. இது யாருடைய குரல்?

கூக்குரல் யாருடையது?

பத்துக்கோடி மக்களைப் பத்து வியாபாரிகள் ஏமாற்றிப் பண்டங்களைப் பதுக்கி, கொஞ்சம் கொஞ்சமாக வெளியே விட்டு, அவைகளுக்கு யானை விலை குதிரை விலை வாங்கியபோது ஒன்றும் சப்தம் கேட்கவில்லை. ஆனால் இப்பொழுது விலைவாசிகள் எல்லாம் கொஞ்சம் குறைய ஆரம்பித்தவுடன் ஏதோ பூகம்பம் ஏற்பட்டுவிட்டதுபோல் கூக்குரல் கேட்கின்றது. ஏதோ பத்து வியாபாரிகளுக்குப் பத்துக் கோடி ரூபாய் நஷ்டமாகிவிட்டதாம்! உடனே பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் இது நாடெங்கும் தமட்டம் போடப்படுகின்றது. தனி நபர்களும் சங்கங்கள் பெயரிலும், மத்திய சர்க்காருக்குத் தந்தி மேல் தந்தியாக பறக்கின்றன. "விலைவாசியை ஏற்றுங்கள். விலைவாசி ஏற உதவுங்கள். இல்லாவிட்டால் இந்தியாவே போய்விடும்" என்றுதான் இத்தந்திகள். மக்களுடைய பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக வாங்கி இம்மலைவிழுங்கிகளிடம் கொடுக்கவே தான் நமது மத்திய சர்க்கார் இருப்பதுபோல் இவர்களுடைய எண்ணம்!

*

இக்கூக்குரல் யாருடையது? இது வியாபாரச் சமூகத்தினுடைய குரல் அல்ல. வியாபாரச் சமூகத்தின் பெரும்பான்மையினர் பொது மக்களைப் போலவேதான் ஏமாற்றப்படும் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். அகில இந்தியாவிலும் உள்ள ஒரு நூறு இருநூறு பகாசுரர்களே இவ்வியாபாரச் சமூகத்தையும் ஏமாற்றுகின்றனர்; மக்களையும் ஏமாற்றுகின்றனர். சர்க்காரையும் ஏமாற்றுகின்றனர். இவர்களுடைய கூக்குரலை அடக்குவதே இப்பொழுது மத்திய சர்க்காரின் முதல் கடமையாகும்.

புதிய சட்டங்கள்

சுருக்கியும் - வரிசையாகவும்

1952 ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்டவை. பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன.]

1. 'பி' ராஜ்யங்களில் நடந்த கிருஸ்தவ விவாகங்களை சட்ட பூர்வமாக்கும் சட்டம். Part B States Marriages Validating Act 1952. (15—2—1952). 1872 ஆம் வருடத்திய இந்திய கிருஸ்தவ விவாகச் சட்டப்படி, 26—1—1950க்குப் பின் 31—3—1951க்குள் 'பி' ராஜ்யங்களில் (அதாவது மைசூர், திருவாங்கூர்—கொச்சி, ஹைதராபாத், மத்திய பாரத், பாடியாலா, ராஜஸ்தான், சௌராஷ்டிரா இந்த ராஜ்யங்களில்) பதிவு செய்யப்பட்டு மணமகனோ, மணமகளோ, அல்லது இருவருமோ கிருஸ்தவர்களாக இருக்கும் திருமணங்கள் எல்லாம் அச்சட்டப்படி அதிகாரம் பெற்ற ஒருவரால் பதிவு செய்யப்பட்ட விவாகங்களைப் போலவே சட்ட பூர்வமானவை ஆக்கப்பட்டிருக்கின்றன. இதற்காக வைக்கப்பட்டிருக்கும் ரிஜிஸ்டர்களும் சட்ட பூர்வமாக வைக்கப்பட்ட ரிஜிஸ்டர்களாகவே பாவிக்கப்பட வேண்டும் என்றும் இச்சட்டத்தில் ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது.

2. லஞ்சத் தடைச் சட்டத் திருத்தம். இன்னும் 5 வருடங்கள் இச்சட்டம் உண்டு. Prevention of Corruption—Amendment Act—1952. (15—2—1952). சர்க்கார் ஊழியர்கள் லஞ்சம் வாங்குவதைப் பற்றி இந்தியன் பீனல்கோடு என்ற குற்றங்களைக் குறித்த போதச் சட்டத்தில் இருக்கும் ஷரத்துக்கள் போதாவென்று இவ்விஷயத்தைப் பற்றி 1947இல் மத்திய சர்க்காரால் ஒரு விசேஷ சட்டம் இயற்றப்பட்டது. இதுதான் லஞ்சத் தடைச் சட்டம் என்ற 1947 ஆம் வருடத்திய 2ஆவது மத்திய சட்டம். சாதாரண சட்டப்படி, ஒரு சர்க்கார் ஊழியர் லஞ்சம் வாங்கிவிட்டதாக அவர் மீது சர்க்காரால் கிரிமினல் வழக்குத் தொடரப்பட்டால், அவர் பணம் வாங்கியதை மட்டில் சர்க்கார் தரப்பில் ருசுப்பித்தால் போதாது; அப்பணம் உத்தியோக தோரணையில் அவர் ஏதோ ஒரு காரியம் செய்வதற்குப் பிரதிப் பிரயோஜனமாகவே வாங்கப்பட்டதென்றும், ருசுப்பித்தால்தான், லஞ்சம் வாங்கியவரைத் தண்டிக்க முடியும். இவ்விதம் ருசுவிடுவது சில சமயங்களில் அசாத்தியமாகி விடுவதாலும், யுத்த காலத்தில் லஞ்ச ஊழல்கள் மிக அதிகரித்த படியாலும், 1947ஆம் வருடத்தில் மத்திய சர்க்காரால் இச்சட்டம் கொண்டுவரப்பட்டு இயற்றப்பட்டது. இச்சட்டப்படி, சம்பளத்தைத் தவிர, வேறு அதிகப்படியான பணத்தையோ சாமான்களையோ வேறு ஒருவரிடம் வாங்கிய ஒரு சர்க்கார் ஊழியர் 'லஞ்சம்' வாங்கியதாகவே முதலெடுப்பில் பாவிக்கப்படும். தான் வாங்கியது 'லஞ்சம்' அல்ல; வேறு ஒரு காரியத்திற்காகச் சட்டபூர்வமாகவேதான் அப்பணம் வாங்கப்பட்டது—என்று குற்றம் சாட்டப்பட்ட சர்க்கார் ஊழியர் ருசுப்பித்தால்தான் அவர் தப்ப முடியும். மேலும் வழக்கமாகப் பணமோ, அல்லது சரியான பிரதிப் பிரயோஜனம் கொடுக்காமல் வேறு பண்டங்களையோ வழக்கமாக வாங்கிவருவதே 'குற்ற நடத்தை' என்று ஒரு தனிக் குற்றமாக (Criminal misconduct) இச்சட்டத்தின் 5ஆவது ஷரத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இக் குற்றம் சாட்டப்பட்ட ஒரு சர்க்கார் ஊழியரிடமோ, அவர் சார்பாக வேறு ஒருவரிடமோ, அவருடைய சம்பளத்திற்கு ஏற்றபடி இல்லாமல் மிக அதிகமான சொத்துக்களோ பணமோ இருப்பதாகச் சர்க்கார் தரப்பில் ருசுப்பித்தால் போதும்; அச்சர்க்கார் ஊழியர் காளடைவில் சிறுகச் சிறுக லஞ்சம் வாங்கியே இந்தச் சொத்துக்களைச் சேர்த்திருப்பதாக நீதிபதிகள் முதலெடுப்பில், பாவிக்கலாம். அவர் தம்முடைய சம்பளத்திற்குச் சம்பந்தமில்லாத அதிகமான சொத்துக்கள் தம்மிடம் எப்படி வந்ததென்று ருசுப்பித்தால்தான் தப்ப முடியும்.

இச்சட்டம் முதலில் 10-3-1950 வரைதான் அமுலில் இருந்தது. பிறகு 10-3-1952 வரை நீடிக்கப்பட்டது. இச்சட்டம் நீடிக்கப்படவேண்டுமா என்பதை ஆலோசிக்க ஒரு பார்லிமெண்ட் கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. இக்கமிட்டியார் இச்சட்டம் இன்னும் 5 வருடங்களாவது நீடிக்க வேண்டுமென்று சிபார்சு செய்தனர். அதை ஒட்டி, பார்லிமெண்டால் இப்பொழுது இத் திருத்தச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இத்

திருத்தச் சட்டப்படி 'லஞ்சத் தடைச் சட்டம்' 10-3-1957 வரை, அதாவது இன்னும் 5 வருடங்கள், அமுலில் இருக்கும்.

3. இந்திய வெடிமருந்து திருத்தச் சட்டம். தண்டனைகள் கடுமையாக்கப்பட்டிருக்கிறது. Indian Explosives Amendment Act 1952 (22-2-1952) வெடி மருந்துகளைப் பற்றிய 1884 ஆம் வருடத்திய 4-ஆவது மத்திய சட்டத்தில் தண்டனைகள்பற்றிய 5, 6 செக்ஷன்கள் திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன. இச்சட்டத்தை அனுசரித்து, மத்திய சர்க்கார் விதிகள் செய்யலாமென்றும்; அவ்விதிகளிலேயே அவைகளை மீறியதற்கு ஒரு குறிப்பிட்ட தொகைக்குள் அபராதம் மட்டில் விதிக்கப்படலாமென்றும் இருந்த 5 ஆவது செக்ஷனின் 3 ஆவது ஷரத்து, இப்பொழுது மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. இனி இச்சட்ட விதிகளை மீறியவர்களுக்குத் தண்டனை எவ்வளவு என்று இச்சட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது, இச்சட்டத்திற்கு மாறாக வெடி மருந்தை இறக்குமதி செய்தாலும், உற்பத்தி செய்தாலும் அதற்கு மூன்று வருடம் வரை சிறைத்தண்டனையோ, அல்லது ரூபாய் 5000 வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாமென்றும; இச்சட்டத்திற்கு மாறாக ஒருவர் வெடி மருந்தைத் தம் வசம் வைத்திருந்தாலும், உபயோகித்தாலும், விற்பனை செய்தாலும், வேறு இடத்திற்குக் கொண்டு போனாலும், அக்குற்றத்திற்கு இரண்டு வருடம் வரை சிறைத் தண்டனை அல்லது ரூபாய் 2000 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாமென்றும், வேறு வகைக் குற்றங்களுக்கு ரூபாய் 1000 வரை அபராதம் விதிக்கப்படலாமென்றும் செக்ஷன் 5 (3) திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

இச்சட்டத்தின் செக்ஷன் 6 இல் கண்ட அதிகாரங்களை உபயோகித்து, மத்திய சர்க்காரால் அறிக்கை மூலம் தடை செய்யப்படும் செய்கைகளைச் செய்பவர்களுக்கு ஏற்கனவே அபராதம் மட்டில் விதிக்கலாமென்று செக்ஷன் 6 (3) இல் இருந்ததும் இப்பொழுது மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. இனி மேற்கண்ட சர்க்கார் அறிக்கைகளுக்கு மாறாக ஒருவர் வெடி மருந்து தயார் செய்தாலும், வைத்திருந்தாலும், இறக்குமதி செய்தாலும் அதற்கு மூன்று வருடம் வரை சிறைத் தண்டனை அல்லது ரூபாய் 5000 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம் என்றும்; கப்பல் மூலம் சட்ட விரோதமாக வெடி மருந்து இறக்குமதி செய்யப்பட்டால், அக்கப்பலின் சொந்தக்காரர் அல்லது நிர்வாகஸ்தருக்கும் ரூபாய் 5000 வரை அபராதம் விதிக்கப்படலாமென்றும் திருத்தப்பட்டிருக்கிறது.

4. சென்னைத் துறைமுகத் திருத்தச் சட்டம். Madras Port Trust Amendment Act 1952 (23-2-1952.) செக்ஷன் 7இல் '21 டிரஸ்டிகள்' என்று இருந்ததை, '20 டிரஸ்டிகள்' என்று திருத்தப்பட்டிருக்கிறது. செக்ஷன் 8 ல் எம். எஸ். எம். ரயில்வே, எஸ். ஐ. ஆர். ரயில்வே இரண்டுக்கும் இரண்டு பிரதிநிதிகள் டிரஸ்டிகளாக இருக்கவேண்டுமென்று இருந்தது, திருத்தப்பட்டு இனி, சதர்ன் ரயில்வே ஜெனரல் மானேஜர் ஒருவரே அவருடைய உத்தியோகம் காரணமாக (Exofficio) சென்னை போர்ட் டிரஸ்டில் ஒரு டிரஸ்டியாக இருப்பார். அதற்காக, செக்ஷன் 8 (c) (d) திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

5. கம்பெனிகளின் மூலதனத் திரட்டுக் கட்டுப்பாடு சட்டத் திருத்தம். Capital Issues Continuance of Control Amendment Act 1952 (23-2-1952) மத்திய சர்க்காரின் அனுமதியின்றிப் பொதுமக்களிடமிருந்து கம்பெனிகளுக்காக பங்குகள், அடமானம்முதலியவை (Shares, debentures, etc) மூலம் மூலதனம் திரட்டக் கூடாதென்று 1947 ஆம் வருடத்திய 29 ஆவது மத்திய சட்டம் இயற்றப்பட்டது. அச்சட்டம் 1952 மார்ச்சு 31 ஆம் தேதியோடு அமுல் இழந்துவிடும்படி இருந்தது, இப்பொழுது இவ்விதக் கட்டுப்பாடு நீடிக்கவேண்டுமென்றும், கட்டுப்பாடு இருந்தால்தான் தேவையான தொழில்களுக்கு மட்டுமே மூலதனத்தைத் திரட்டி உபயோகிப்பது சாத்தியமாகுமென்றும் இந்தியத் திட்ட கமிஷன் (Planning Commission) சிபார்சு செய்திருப்பதால், இக்கட்டுப்பாட்டுச் சட்டம் 31-3-1956 வரை நீடிக்கும்படி திருத்தப்பட்டிருக்கிறது. மேலும், கம்பெனிகளுக்குப் பங்கு சேர்க்க, மத்திய சர்க்காரின் அனுமதி கோரும் மனுக்களின் பேரில், ஒரு கட்டணம் விதிக்கவும் விதிகள் ஏற்படுத்த மத்திய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

8. அயல் நாட்டுச் செலாவணி ஒழுங்குச் சட்டத் திருத்தம். Foreign Exchange Regulation Amendment Act—1952. இந்தியாவின் அயல் நாட்டுச் செலாவணியையும் தங்கம் வெள்ளியின் ஏற்றுமதி இறக்குமதியையும் ஒழுங்குபடுத்துவதற்காக ஏற்பட்ட 1947 ஆம் வருடத்திய 7 ஆவது மத்திய சட்டம் 24—3—1952 தேதியுடன் அமுல் இழந்து விடுவதாக இருந்தது. இப்பொழுது இச்சட்டம் 31—12—1957 வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இச்சட்டப்படி துரிதமான நடவடிக்கைகள் எடுப்பதற்காகச் சில ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டுமிருக்கின்றன. இதற்காக ஜனாதிபதி அவர்களால் பிரகடனம் செய்யப்பட்ட அவசரச் சட்டம் ரத்துச் செய்யப்பட்டு அதே ஷரத்துக்களுடன் பார்லிமெண்டால் இத் திருத்தச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

9. பாகிஸ்தான் கோர்ட் நடவடிக்கைச் சட்டம். Indian Independence Pakistan Courts—Pending Proceedings—Act 1952. (23—2—1952) பழைய இந்தியா பிரிவினை செய்யப் படும்போது பெண்டிங்காக இருந்து பிறகு பாகிஸ்தானத்திலுள்ள கோர்ட்டுகளில இந்திய சர்க்கார் மீது ஏற்பட்டிருக்கும் டிக்ரிகள் செல்லாவென இச் சட்டம் பிரகடனம் செய்கின்றது. அவ்வித டிக்ரி பெற்றவர்கள் இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள்ளோ அல்லது பாகிஸ்தான் கோர்ட்டு டிக்ரித் தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள்ளோ மறுபடியும் அதே விஷயமாய் இந்தியக் கோர்ட்டில் தாவா செய்து கொள்ளலாமென்றும் அப்படிச் செய்தால் அது காலாவதிச் சட்டத்தால் பாதிக்கப்பட மாட்டாதென்றும் ஒரு ஷரத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதற்காக ஜனாதிபதி அவர்களால் பிரகடனம் செய்யப்பட்ட அவசரச் சட்டம் ரத்துச் செய்யப்பட்டு அதே ஷரத்துக்களைக் கொண்ட இச்சட்டம் இந்திய யூனியன் பார்லிமெண்டால் இயற்றப்பட்டுள்ளது.

12. நிலக்கரிச் சுரங்கங்கள் பாதுகாப்பு, பந்தோபஸ்துச் சட்டம். Coal Mines—Conservation and Safety Act 1952. (4-3-1952.) இந்திய திட்டக் கமிஷனின் சிபார்சுப்படி இரும்பை உருக்குவதற்கு அத்தியாவசியமான நிலக்கரியை வீணாக்காமல் பாதுகாத்து வருவதற்காக மத்திய சர்க்காரால் ஒரு போர்டு ஏற்படுத்தப்படும்.

18. அரசாங்கப் பொதுச் செலவு அனுமதிச் சட்டம். Appropriation Act 1952. (4-3-1952.) இந்திய அரசாங்கத்தின் பொதுச் செலவுகளுக்காக 31-3-1952 உடன் முடியும் வருடத்தில் இந்தியப் பொது நிதியிலிருந்து இன்னும் ரூபாய் 93,23,53,500 செலவு செய்ய மத்திய சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

16. ரயில்வேச் செலவு அனுமதிச் சட்டம். Appropriation-Railways-Act 1952. (4-3-1952.) இந்திய ரயில்வேக்களின் செலவுக்காக 31-3-1952 உடன் முடியும் வருடத்தில் இந்தியப் பொது நிதியிலிருந்து இன்னும் ரூபாய் 7,69,24,000 செலவு செய்ய மத்திய சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

17. கப்பல் போக்குவரத்துக் கட்டுப்பாடு திருத்தச் சட்டம். Control of Shipping Amendment Act 1952. (4-3-1952) 1947இல் கப்பல் போக்கு வரத்துக் கட்டுப்பாடுச் சட்டம் இயற்றப்பட்டது. இந்தியக் கரையோரமாகப் போய் வரும் கப்பல்களை உபயோகமுள்ள முறையில் பயன்படுத்துவதற்காகவும், கரையோரமாகப் போவதற்கு இந்தியக் கப்பல்களுக்கே ஆதரவு அளிக்கவும் அவைகளுக்கு லைசென்சு முதலியவை கொடுத்து, ஒழுங்கு படுத்துவதற்காகவும் அச்சட்டம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இச்சட்டம் தாற்காலிகமானது. 31-3-1952 உடன் அமுல் இழந்து விடும்படி இருந்தது, இத்திருத்தச் சட்டத்தால் 31-3-1954 வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. எல்லா வியாபாரக் கப்பல்கள் சம்பந்தமாகவும் அதற்குள் விரிவான சட்டம் இயற்ற மத்திய சர்க்கார் உத்தேசித்திருக்கின்றனர். அது வரை இச்சட்டம் அமுலில் இருக்கவே இத்திருத்தச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

18. தொழில் தகராறு திருத்தச் சட்டம். Industrial Disputes Amendment Act, 1952. (4-3-1952.) 1947ஆம் வருடத்திய தொழில் தகராறுச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. தொழில் தகராறுகளை விசாரிப்பதற்காக நியமிக்கப்படும் மத்தியஸ்தர் அத்தகராறில் சம்பந்தப்பட்ட ஒரு கம்பெனியின் பங்குதாராக இருந்தால் பாதகமில்லை என்றும் ஆனால் அச்சந்தர்ப்பத்தில் அவர் தமக்கு உள்ள பங்குகளின் விவரத்தைச் சர்க்காருக்குத் தெரிவித்து விடவேண்டுமென்றும் செக்ஷன் 2 திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் தகராறுகள் இருந்தால் மட்டில் தான் அவைகளை விசாரித்து முடிவு செய்யும்படி

உத்தரவிடச் சர்க்காருக்கு அதிகாரமுண்டு. அவ்விதத் தகராறுகளை தொழில் கோர்ட்டார் விசாரித்துச் செய்யும் முடிவினால் வேறு வகைத் தொழிலாளர்களும பாதிக்கப் படுவார்கள் என்று சர்க்காருக்குத் தோன்றினால் அத்தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவரையில் யாதொரு தகராறுகளும் ஏற்படாதிருந்தகூட அவர்களைப்பற்றியும் விசாரணை செய்து முடிவு செய்யும்படி உத்தரவிட, சர்க்காருக்கு இப்பொழுது அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்காகச் செக்ஷன் 10 இன் வாசகம் திருத்தப்பட்டிருக்கிறது.

19. தொழிலாளர் சேமிப்பு நிதிச் சட்டம். Employee's Providents Funds Act, 1952. (4-3-1952.) தொழிலாளர்களின் நன்மைக்காகச் சமீப காலங்களில் மத்திய சர்க்காரால் இயற்றப்பட்டு வரும் சட்டங்களில் இதவும் ஒரு மிக முக்கிய சட்டமாகும். சில தொழில்களில் வேலைசெய்யும் தொழிலாளர்களும சரி, அவர்களுடைய முதலாளிகளும் சரி ஒரு சேமிப்பு நிதிக்காகத் தொகைகள் கட்டிவரவேண்டும். அதிலிருந்து தொழிலாளருக்கு அவசியமான சமயங்களில பணம் கொடுக்கப்படும். தொழிலாளர் இறந்துவிட்டால் அவருடைய மனைவி மக்களுக்கு இத்தொகை கொடுக்கப்படும். இம்முக்கிய சட்டத்தின் ஷரத்துக்கள் இந்த இதழில் விவரமாக விளக்கப் பட்டிருப்பதை கவனிக்கவும்.

ஹைகோர்ட் நீதிபதிகளின் எண்ணிக்கை நிர்ணயம்.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் 216ஆவது ஷரத்தப்படி இந்தியாவிலிருக்கும் ஒவ்வொரு ஹைகோர்ட்டுக்கும், எவ்வளவு நீதிபதிகளுக்கு மேல் இருக்கக் கூடாதென்று நிர்ணயம் செய்ய இந்திய ஜனாதிபதி அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரத்தை உபயோகித்து ஜனாதிபதி அவர்களால் 34-ஆம் நம்பர் அரசியல் உத்தரவின் மூலம் (c. o. 34) கீழே கண்டபடி ஒவ்வொரு ஹைகோர்ட்டுக்கும் பிரதம நீதிபதி உள்பட மொத்தம் இருக்கக் கூடிய நீதிபதிகளின் உச்ச எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது:—

ஹைகோர்ட்		நீதிபதிகள்
அலகாபாத் ஹைகோர்ட்	.. .. ..	24
அஸ்ஸாம் ”	.. .. ..	5
பம்பாய் ”	.. .. ..	14
கல்கத்தா ”	.. .. ..	20
சென்னை ”	.. .. ..	16
நாகபுரி ”	.. .. ..	10
ஒரிசா ”	.. .. ..	7
பாட்னா ”	.. .. ..	14
பஞ்சாப் ”	.. .. ..	9
ஹைதராபாத் ”	.. .. ..	11
மத்தியபாரத் ”	.. .. ..	8
மைசூர் ”	.. .. ..	6
பாடியாலா ”	.. .. ..	5
ராஜஸ்தான் ”	.. .. ..	10
சௌராஷ்டிரா ”	.. .. ..	5
திருவாங்கூர்-கொச்சி	.. .. ..	8

தமிழில் சட்டப் புத்தகங்கள்

“வக்கீல்” 1951-ஆம் வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள இதழ்கள் பைண்டு செய்யப்படாமல் இருப்பது செட் ஒன்று

விலை ரூ. 3 2 0
ஷை பைண்டு செய்யப்பட்டது ரூ. 4 0 0
தமிழில் விற்பனை வரி ரூ. 2 0 0

தபால் சார்ஜ் பிரத்தியேகம். அணா 8 சேர்த்து அனுப்பினால், ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பப்படும்.

இம்மாதம் பிரசுரம் செய்யப்படும் புத்தகம்:- சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் [புதிய ஒத்திருத்தம் உள்பட]

இப்புத்தகம் விசேஷ வருட சந்தாதாரர்களுக்கு இம்மாதம் தபாலில் அனுப்பப்படும்.

மேல்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

மானேஜர்,
“வக்கீல்” காரியாலயம்,
தபால் பெட்டி 26, கும்பகோணம் (S. I.)

ஆடைகளை அழகு பெறச் செய்வது!

அன்னகிளி

சோப்

தயாரிப்பவர் :-

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்,
P. B. No. 38
தஞ்சாவூர்.

தொழிலாளர் சேமிப்பு நிதிச் சட்டம் (1952)

[Employees' Provident Fund Act 1952. தொழிலாளர் சேமிப்பு நிதிச்சட்டம் 1952 ஆம் வருடத்திய 19 ஆவது மத்திய சட்டம். இந்திய பார்லிமெண்டால் இயற்றப்பட்டு 4—3—1952 இல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்று அன்று முதல் சட்டமாயிற்று.]

இச்சட்டம் காஷ்மீர் தவிர அகில இந்தியாவிலும் அமுலில் இருக்கும். இச்சட்டம் முதலெடுப்பில் ஆறு வகைப்பட்ட தொழிற்சாலைகளில் தான் அமுலுக்கு வரும். அதாவது, (1) சிமெண்ட் (2) சிகரெட் (3) எலெக்ட்ரிக், மெகானிகல் என்ஜினியரிங் சாமான்கள் (4) இரும்பு, எஃகு (5) காகிதம் (6) ஜவுளி (பருத்தி, கம்பளம், சணல், பட்டு, செயற்கைப்பட்டு உள்பட) இந்த ஆறு வகையான சாமான்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் 50 அல்லது அதற்கு அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளுக்கு மட்டில் தான் முதலில் இச்சட்டம் அமுலுக்கு வரும். ஆனால் வேறு வகைத் தொழிற்சாலைகளுக்கும் இச்சட்டத்தை விஸ்தரிக்க மத்திய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. மேலும், 50 தொழிலாளர்களுக்குக் குறைவாக வேலை செய்யும் தொழிற்சாலைகளுக்கும் இச்சட்டத்தை மத்திய சர்க்கார் விஸ்தரிக்கலாம். ஆனால் சர்க்கார் அல்லது ஸ்தல ஸ்தாபனங்களுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளுக்கு இச்சட்டம் கிடையாது. மேலும், ஒரு தொழிற்சாலை ஆரம்பித்து மூன்று வருடங்கள் முடியும் வரை எவ்விதமான தொழிற்சாலைக்கும் இச்சட்டம் கிடையாது.

இச்சட்டப்படி சேமிப்பு நிதி திரட்டுவதைப் பற்றி மத்திய சர்க்காரால் ஒரு திட்டம் வகுக்கப்படும். ஒவ்வொரு வகைத் தொழிலுக்கும் இத்திட்டத்தில் விதிகள் ஏற்படுத்தலாம். ஒவ்வொரு முதலாளியும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் கொடுத்து வரும் சம்பளம் பஞ்சப்படி இரண்டையும் சேர்த்து அதில் 6¼ சதவிகிதம், அதாவது, ரூபாய் 1க்கு அணா 1 வீதம் கணக்காகும் தொகையை இந்த நிதிக்காக முதலாளிகள் கட்டி வர வேண்டும். ஒவ்வொரு தொழிலாளரும் அதே விகிதப்படி இந்நிதிக்குக் கட்டி வர வேண்டும். தொழிலாளர் இஷ்டப்பட்டு, விதிகளிலும் இது அனுமதிக்கப்பட்டால், தொழிலாளர் கட்டும் கட்டணம் இன்னும் அதிகமாகக் கூட இருக்கலாம். ஆனால் 8⅓ சதவிகிதத்திற்கு மேற்படாமல் இஷ்டப்படும் தொழிலாளர்கள் கட்டி வரலாம். கட்டவேண்டிய தொகை அணா பைசாக் கணக்கில் இருந்தால் அதை அடுத்த ரூபாய், அல்லது அரை ரூபாய் அல்லது கால் ரூபாயாகச் செய்து கட்டிவர வேண்டும். முதலாளிகள் கட்டி வர வேண்டிய கட்டணங்களைக் கட்டா விட்டால் அவை நிலக் கிஸ்தியைப் போல் அவரிடமிருந்து வசூல் செய்யப்படும்.

மத்திய சர்க்காரால் இச்சட்டத்தை அனுசரித்து ஏற்படுத்தப்படும் சேமிப்பு நிதித் திட்டத்தில் மற்ற விவரங்கள் எல்லாம் இருக்கும். எந்த வகைத் தொழிலாளர்கள் இச்சேமிப்பு நிதித் திட்டத்தில் சேர்ந்து கொள்ள வேண்டும்; எப்பொழுது தொழிலாளர்கள் இத்திட்டத்தில் சேர வேண்டியதில்லை என்றும் கட்டணம் கட்ட வேண்டியதில்லை என்றும் விதிவிலக்கு அளிக்கலாம்; முதலாளிகளும் சரி, தொழிலாளர்களும் சரி இச்சேமிப்பு நிதிக்குத் தொகை கட்ட வேண்டிய கெடுவும் கட்டவேண்டிய முறையும்; முதலாளிகள் இத்திட்டத்தை நிர்வாகம் செய்ய வேண்டியதற்காகக் கட்டவேண்டிய அதிக கட்டணம்; இந்நிதியை நிர்வாகம் செய்ய டிரஸ்டிகள் அடங்கிய போர்டு ஒன்று ஏற்படுத்துவது; அதன் அங்கத்தினர்கள்; இவர்கள் நிதியை நிர்வாகம் செய்ய வேண்டிய முறை இந்நிதியிலிருந்து தொழிலாளர் எச்சந்தர்ப்பங்களில் தொகைகள் பெற்றுக் கொள்ளலாம்; இந்நிதியிலிருக்கும் தொகைகளுக்குக் கொடுக்கப்படும் வட்டி; இத்திட்டத்தில் சேர்ந்த தொழிலாளர் இறந்து போனால் அவருடைய பணத்தை வாங்கிக் கொள்ளப் பாத்தியமுடையவர்கள் முதலிய பல விஷயங்களைப் பற்றிய விதிகள் எல்லாம் சர்க்கார் வகுக்கப்போகும் சேமிப்பு நிதித் திட்டத்தில் இருக்கும். இத்திட்டத்தை மாற்றவும் திருத்தவும் மத்திய சர்க்காருக்கு அதிகாரமுண்டு. ஆனால் திருத்தம் செய்யப்பட்டால் அவற்றைப் பார்லிமெண்டுக்கு சமர்ப்பிக்கவேண்டும்.

இந்நிதிக்கு முதலாளிகள் கட்டும் தொகைகளுக்கு வருமான வரிச் சட்டப்படி வருமான வரி கிடையாது. மேலும், தொழிலாளர் கொடுக்கவேண்டிய கடன்களுக்காக ஒருவரும் அத்தொழிலாளருக்குச் சொந்தமான இச்சேமிப்பு நிதியை ஜப்தி செய்ய முடியாது. அத்தொழிலாளர் இன்சால்வெண்டானாலும் இத்தொகை அபிஷியல் ரிசீவரிடம் போகாது. தொழிலாளர் இறந்த பிறகு இத்தொகையை வாரிசுகள் அடைந்தாலும் இத்தொகை இறந்த தொழிலாளருடைய கடன்களுக்குக் கட்டுப்படாது. இத்தொகையைக் கட்டவேண்டிய

(14-ம் பக்கம் பார்க்க.)

187717

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்
இதர சர்க்கார் அறிக்கைகள்

சில 'கண்ட்ரோல்' உத்தரவுகளில் திருத்தம்.

கீழே கண்ட கட்டுப்பாடு உத்தரவுகளின் ஷரத்துக்களை மீறியவர்கள்மீது கிரிமினல் வழக்குத் தொடர அந்தந்த ஜில்லாவின் ஜில்லா சப்ளை ஆபீசர் அல்லது ஜில்லா கலெக்டர் யாராவது ஒருவருடைய முன் அனுமதி வேண்டுமென்று அவ்வுத்தரவுகள் திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன:—(1) சென்னை பங்கீடு பூர்வாங்க ஏற்பாடு உத்தரவு 1947 (Madras Rationing Preparatory Measures order 1947.) (2) சென்னை பங்கீடு உத்தரவு 1947 (Madras Rationing Order 1947) (3) சென்னை பங்கீடு விசாரணை உத்தரவு 1947. (Madras Rationing Enquiry Order 1947.) (4) சென்னைச் சாப்பாடு விடுதிகள் கட்டுப்பாடு உத்தரவு 1947 (Madras Food Restrictions on service of Meals by Catering Establishments Order 1947.) (5) சென்னை அத்தியாவசிய பண்டங்களை ஓர் அளவுக்குள் சேகரிக்க உத்தரவு 1947. (Essential Articles Restricted Acquisition Order 1947.)

(26—2—1952-சென்னை சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்ட்—பாகம் II-பக்கம் 29.)

போக்குவரத்து விதிகள் திருத்தம்

1938ஆம் வருடத்திய சென்னைப் போக்குவரத்து விதிகளில் (Madras Traffic Rules 1938) 49 C என்று புதிதாக ஒரு விதி சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது, முனிசிபாலிட்டி, பஞ்சாயத்து முதலிய ஸ்தல ஸ்தாபனங்களால் ஏற்படுத்தப்பட்ட பஸ் ஸ்டாண்டு, அல்லது லாரி ஸ்டாண்டுகளில், மெதுவாகப் போகும் மாட்டுவண்டி, குதிரை வண்டி முதலிய வாகனங்களால் மோட்டார் வண்டிகள் சரியாகப் போவது தடைப்பட்டாலும், அபாயம் நேரும்போல் இருந்தாலும், இதை ஒழுங்குபடுத்தும்படி அந்த ஸ்தல ஸ்தாபனத்தைக் கேட்க அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள போலீஸ் டிப்டி சூபரிண்டெண்டுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வழிகளை விசாலமாகச் செய்யவோ, போக ஒரு வழி வர ஒருவழி என்று ஏற்படுத்தவோ வேறு யுக்தமான ஏற்பாடுகள் செய்யவோ அவர் கேட்கலாம். இவ்விதம் கேட்கப்பட்ட 3 மாதங்களுக்குள் அந்த ஸ்தல ஸ்தாபனம், அவ்விதம் செய்யாவிட்டாலும், போலீஸ் அதிகாரிக்கும் அதற்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டாலும், இது விஷயத்தை அப்போலீஸ் அதிகாரி, ஜில்லா சூபிரண்டெண்டு மூலம், ஜில்லா கலெக்டருக்கு தெரிவிக்கவேண்டும். ஸ்தல ஸ்தாபனத்தின் அபிப்பிராயத்தையும் கேட்டு 3 மாதங்களுக்குள் ஜில்லா கலெக்டர் யுக்தமான உத்தரவுகள் செய்வார். இது ஸ்தல ஸ்தாபனத்தையும் போலீஸ் அதிகாரியையும் கட்டுப்படுத்தக் கூடிய உத்தரவு. இது சென்னைக் கார்பொரேஷனுக்கு இல்லை.

(11—3—1952—சென்னைச் சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்ட்—பாகம் I-பக்கம் 169.)

சினிமா விதிகள் திருத்தம். டிக்கட் வாங்குபவர்களுக்கு வசதிகள்.

1918ஆம் வருடத்திய சினிமாச் சட்டத்தை (Cinematograph Act, 1918) அனுசரித்து சென்னைச் சர்க்காரால் 1933இல் ஏற்படுத்தப்பட்ட சினிமா விதிகளில் விதி 10 (2) என்று கீழ கண்டபடி சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது:—சினிமாக் கொட்டகைகளில் டிக்கட் கொடுக்கப்படும் ஜன்னல்களுக்கு வெளியே டிக்கட் வாங்குபவர்கள் (க்யூ) வரிசையாக ஒருவர் பின்னால் ஒருவராக வந்து டிக்கட் வாங்கும்படி 2 அடிக்குக் குறையாமல் அகலம் வைத்து, 4 அடி உயரத்தில் இரும்புக் குழாய்களால் தடுப்பு ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். (இதன் அமைப்பு எப்படி இருக்கவேண்டுமென்று விதியில் விளக்கப்பட்டிருக்கிறது.) மேலும் 'க்யூ' வரிசையில் நிற்பவர்கள் மேல் வெயில் அல்லது மழை அடிக்காமல் சாசுவதமாகவோ, அல்லது அஸ்பெஸ்டாஸ் சிமெண்டு ஓடுகளாலோ, மேலே பாதுகாப்பு அமைக்கப்பட வேண்டும். டிக்கட் வாங்கக்கூடிய மொத்த நபர்களில் மூன்றில் ஒரு பங்குக்கு இவ்வித வசதிகள் செய்து கொடுத்தால் போதும்.

I—3—1952க்குப்பின் புதிதாக கட்டப்படும் அல்லது புதுப்பிக்கப்படும் சினிமாக் கொட்டகைகளுக்கு மட்டில் தான் மேலே கண்ட விதி.

(11—3—1952. சென்னை சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்ட்—பாகம் I-பக்கம் 169.)

இந்து தர்ம சொத்துக்களைப் பற்றி சர்க்கார் நடவடிக்கைகள் எடுக்க பூர்வாங்க விசாரணை.

சமீபத்தில் இயற்றப்பட்ட 1951 ஆம் வருடத்திய சென்னை இந்து மத—தர்ம பரிபாலனச் சட்டம் இப்பொழுது கோயில்களுக்கும் மடங்களுக்கும் தான் உண்டு. கோயில்களுக்கு மடங்களுக்கும் சம்பந்தமில்லாத அன்னதானம், அன்னசத்திரம், பாடசாலை, தண்ணீர் பந்தல் போன்ற பலவகைப் பொது இந்து ஜாதி தர்மங்களுக்குக் கிடையாது. ஆனால் இவ்வித தர்மங்களுக்கும் இச் சட்ட ஷரத்துக்களை அமுலுக்குக் கொண்டுவர சென்னை சர்க்காருக்கு செக்ஷன் 3-ன்படி அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதை அனுசரித்து சென்னை இந்து மத-தர்ம பரிபாலன கமிஷனரால் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அதாவது இந்துக்களால் ஏற்படுத்தப்பட்ட பொது தர்மங்கள் ஏதாவது சரிவர நடக்காமல் இருந்தாலும், அத்தர்ம சொத்துக்களின் நிர்வாகம் சரிவர நடக்காமலோ, ஊழல் நிறைந்தே இருந்தாலும், அத்தர்மங்களின் விவரங்களை, அக்கரையுள்ளவர்கள், சென்னை இந்து மத தர்ம ஸ்தாபன கமிஷனருக்கு (Commissioner, Hindu Religious and Charitable Endowments, Madras) விவரமாக தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். சரிவர நடத்தப்படாத தர்மங்களைப்பற்றி இச்சட்டப்படி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

(19—2—1952—சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் 1A-பக்கம் 111.)

இந்திய ஆயுதச் சட்ட விதிகள் (1951) Indian Arms Rules—1951 1924 ஆம் வருடத்திய ஆயுதச் சட்ட விதிகளை (Indian Arms Rules 1924) ரத்துச் செய்து, இந்திய சர்க்காரால் புதிதாக இந்திய ஆயுதச் சட்ட விதிகள் 1951—ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இவ்விதிகள் 12-2-1952 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட் ரூல் சப்ளிமெண்ட்—பாகம் I—43 முதல் 97 வரை உள்ள பக்கங்களில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன.

ஸ்டார் புகையிலை கம்பெனி
மார்க்
ஸ்டார் புகையிலை
TRADE MARK
சிவபுரி
புதுக்கோட்டை

சுவைப்பதற்கு மனோரம்மியமானது

ஸ்டார் புகையிலை கம்பெனி,
உரிமையாளர்கள்:—
மீ.ந.அ.செய்யது இப்ராம்ஸா & சன்ஸ்
தபால்பெட்டி நீ. 20.
புதுக்கோட்டை.

வரிகள்

விறபனை வரிச் சட்டப்படி லைசென்சு பெற்ற வியாபாரிகளின் டிராவலிங் ஏஜண்டுகளுக்கும் 'பர்மிட்' வேண்டும்.

விற்பனைவரி விதிகளில் (General Sales Tax Rules 1939) விதி 6 (1A) என்று இருந்தது ரத்துச் செய்யப்பட்டுவிட்டது. அதாவது, விற்பனைவரிச் சட்டப்படி சில சாமான்களைப் பொறுத்தமட்டில் ஒரு இடத்தில் வியாபாரம் செய்ய 'லைசென்சு' வாங்கிக் கொண்டிருக்கும் வியாபாரிகள் அச்சரக்கை அதே தாலுக்காவிலுள்ள சந்தைகளிலும் விற்பனை செய்யலாமென்றும், இவ்விதமான சந்தை கூடும் இடங்களும் 'லைசென்சி'லேயே குறிப்பிடப் பட்டிருக்க வேண்டுமென்றும் ஒரு ஷரத்து இருந்தது. அது ரத்துச் செய்யப்பட்டுவிட்டது. ஆனால் அதற்குப் பதிலாக விதி 6A என்று ஒரு புதிய விதி சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இப்புதிய விதி 6A என்பதின் விவரம்:—(1) விற்பனை வரிச்சட்டத்தின் 5ஆவது செக்ஷன்படி சில சரக்குகளை விற்பனை செய்ய 'லைசென்சு' பெற்ற வியாபாரிகள் லைசென்சில் குறிப்பிட்ட இடத்தைத் தவிர வேறு இடங்களில் வியாபாரம் செய்வதற்காக விற்பனை வரி அதிகாரிக்கு மனுப் போட்டு ஒரு தனி 'பர்மிட்' வாங்கிக்கொள்ள வேண்டும். தாமே அப்படி வியாபாரம் செய்வதானாலும் சரி, 'டிராவலிங் சேல்ஸ்மன்' அல்லது வேறு பிரதிநிதிகள் மூலம் வியாபாரம் செய்வதானாலும் சரி, ஒவ்வொருவருக்கும் தனித்தனி, 'பர்மிட்' வாங்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவருக்கும் தனித்தனி மனுப்போட வேண்டும். (2) ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதிக்குள் லைசென்சு கொடுக்கும் அதிகாரியிடம் சேரும்படி பர்மிட் மனுக் கொடுக்க வேண்டும். புதிதாக வியாபாரம் ஆரம்பிக்கும் வியாபாரிகள், வியாபாரம் ஆரம்பித்த தேதியிலிருந்து 30 நாட்களுக்கும் பர்மிட்டுக்காக மனுப்போடவேண்டும். ஆனால் 1951—52 வருடத்திற்கு இவ்விதிகள் அமுலுக்கு வந்த தேதியாகிய 26-2-1952லிருந்து 30 நாட்களுக்குள் மனுப்போடவேண்டும். (3) பர்மிட்டுக்காகப் போடும் மனுவில் லைசென்சு பெற்ற வியாபாரியின் பெயர், விலாசம், லைசென்சின் நம்பர், தேதி, எந்தச் சரக்குகளுக்காக லைசென்சு யாருக்குப் பர்மிட் வேண்டுமோ அவருடைய பெயர், விலாசம் இவைகள் இருக்கவேண்டும். (4) ஒவ்வொரு 'பர்மிட்டு'ம் மார்ச்சு மாதம் 31ஆம் தேதி முடியத்தான் செல்லும். ஆனால் அடுத்த வருடத்திற்கு இவ்விதிகளின்படி புதுப்பித்துக்கொள்ளலாம். லைசென்சே தாமதமாகப் புதுப்பித்துக் கொண்டால், பர்மிட்டை பட்டில் அதற்கு முன் தேதி முதல் புதுப்பித்துக் கொள்ள முடியாது. (5) பர்மிட்டைப் புதுப்பிக்கவும் ஏப்ரல் 30 தேதிக்குள் மனுப்போட வேண்டும். (6) அத்தேதிக்குப் பின்வரும் மனுக்களுக்கு மட்டில், மனு அதிகாரியிடம் கிடைத்த தேதியிலிருந்து தான் சாதாரணமாய்ப் பர்மிட் கொடுக்கப்படும். ஆனால் அந்த ஜில்லாவின் கமர்சியல் டாக்ஸ் அபீசருக்கு யுக்தமாய்த் தோன்றினால், ஏப்ரல் 30தேதிக்குப் பின்வரும் பர்மிட் மனுக்களுக்கும் ஏப்ரல் 1 ஆம் தேதி முதலே அமுலில் இருக்கும்படி பர்மிட் கொடுக்க அதிகாரம் உண்டு. ஆனால் இதற்காக ஒரு அபராதம் வாங்கிக் கொண்டுதான் இவ்விதமான உத்தரவு செய்யலாம். அபராதத் தொகை கீழ்கண்ட தொகைக்கு மேல் இல்லாமல் அவ்வதிகாரி நிர்ணயம் செய்வார். கட்டணமில்லாமல் லைசென்சு வாங்கக்கூடிய கதர் நவுளி வியாபாரத்திற்குத் தாமதமாகக் கிடைக்கும் பர்மிட் மனுவுக்கு ரூ. 5க்கு மேலும் மற்றச் சரக்குகளை விற்பனை செய்யத் தாமதமாகக் கிடைக்கும் பர்மிட் மனுவுக்கு ரூ. 45க்கு மேலும் அபராதத் தொகை இருக்காது. (7) பர்மிட் கேட்கும் ஒவ்வொரு மனுவுக்கும் கட்டணம் ரூ. 5 கட்டவேண்டும். கதர் வியாபாரத்திற்காக கேட்கும் பர்மிட்டுக்குக் கட்டணம் இல்லை. (8) கட்டணத்தைச் சர்க்கார் கஜானாவில் கட்டி, ரசீதை அல்லது செக்கை—பர்மிட் மனுவுடன் அனுப்பவேண்டும். (9) லைசென்சு கொடுக்கும் அதிகாரியேதான் நமூனா 9Aன்படி பர்மிட் கொடுப்பார். (10) பர்மிட்படி செய்யும் வியாபாரத் தொகையையும் லைசென்சில் குறிப்பிட்ட இடத்தின் கணக்கில் சேர்த்து, மொத்த வியாபாரக் கணக்கு கொடுக்க வேண்டும். (11) பர்மிட்படி வியாபாரம் செய்யும் ஒவ்வொருவரும் பர்மிட்டைத் தம்முடன் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். விற்பனை வரி அதிகாரிகள் கேட்கும்போது பர்மிட்டைக் காண்பிக்க வேண்டும். தவிர, பர்மிட்படி வியாபாரம் செய்தவற்காகத் தம்மிடம்

ஒப்படைக்கப்பட்ட சரக்கின் விபரம்; தினசரி பர்மிட் வைத்திருப்பவர் செய்யும் வியாபாரக் கணக்குத் தினசரி விற்பனை செய்யப்படும் சரக்கு; தினசரிக் கையிருப்பு சரக்கு இவைகளின் விபரம் காண்பிக்கக் கூடிய கணக்குகளையும் அவர் கையுடன் வைத்துக் கொண்டிருக்கவேண்டும். இவைகளையும் அதிகாரிகள் கேட்கும்போது காண்பிக்கவேண்டும். (12) லைசென்சு பெற்றவர் கேட்டுக் கொண்டால் பர்மிட்டை ரத்துச் செய்து விடலாம். (13) லைசென்சு ரத்துச் செய்யப்படும் போது அத்துடன் பர்மிட்டும் ரத்துச் செய்யப்படும். மேலும் பர்மிட்டில் கண்ட நிபந்தனைகள் மீறப்பட்டாலும் பர்மிட்டை ரத்துச் செய்ய அதிகாரம் உண்டு. (14) வியாபாரியின் பிராஞ்சுகளில் நடக்கும் வியாபாரத்திற்கு இவ்விதி கிடையாது. இவ்விதிக்குத் தகுந்தபடி கூறுகளின் வாசகங்களும் மாற்றப்பட்டிருக்கின்றன.

(26-2-1952) சென்னை—சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்ட்—பாகம் I—பக்கம் 143.)

(10-ம் பக்கம் தொடர்ச்சி)

முதலாளி இன்சால்வெண்டாகப் போனாலும் அல்லது கம்பெனிகள் முறிந்து போனாலும் மற்றக் கடன்களைக் கொடுப்பதற்கு முன் இத் தொகைகள் கொடுக்கப் படவேண்டும்.

இச்சட்டப்படி கட்டணம் சட்ட வேண்டிய முதலாளிகள் இதற்காக நேரிடையாகவோ மறைமுகமாகவோ, இத்தொகையைத் தொழிலாளருடைய சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யக் கூடாது.

இச்சட்டத்தை அமுல் நடத்த இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்படுவார்கள்.

இச்சட்டப்படி கொடுக்க வேண்டிய கட்டணங்களைக் கட்டாமலிருக்கும் பொருட்டு, பொய்க் கணக்குகள் கொடுப்பதும், இச்சட்டத்தை அனுசரித்த ஏற்படும் திட்டத்தில் கண்ட விதிகளை மீறுவதும் குற்றங்களாகும். இக்குற்றங்களுக்கு ஆறுமாதம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப் படலாம்.

கல்யாண பட்டுநூல் ஜவுளிகளுக்கு

★

ராதா ஸில்க் எம்போரியம்

★

119, பெரியதெரு, :: கும்பகோணம்.

விளம்பரம்

ஸ்ரீ மகாலக்ஷ்மி யாத்திரா ஸ்பெஷல்

உங்கள் சொந்த கிராமத்தில் உலவுதல் போல் சகல வசதிகளுடன் வட இந்திய யாத்திரை செய்ய தமிழ் நாட்டினருக்கு அரிய சந்தர்ப்பம். வரிசைக் கிரமப்படி இடம் உள்ள வரை ஆர்டர்கள் ஏற்றுக்கொள்ள கடைசி தேதி 10—4—52. டிபன் எக்ஸ்ட்ரா (பாக்கி விபரங்கள் "வக்கீல்" 1952 மார்ச்சு மாதத்திய இதழில் பார்க்கவும்.)

டிக்கெட்டிற்கு முந்துங்கள்.

புரோப்ரைட்டர்: M. கணபதி செட்டியார், மிராசுதார்.

ஆர்கனைசர்: K. சேஷாத்ரி அய்யங்கார், அஸ்ட்ராலஜர்,

ஸ்ரீமுஷ்ணம், S. A. Dist.

தொழிலாளர் பகுதி

[இப்பகுதியில் தொழிற்சாலைச் சட்டம், ஷாப் சட்டம், தொழில் தகராறு சட்டம், குறைந்த பட்சக் கூலிச் சட்டம் முதலியவை பற்றிய சட்ட விஷயங்கள் விளக்கப்படும்.]

ஷாப் சட்ட விதி விலக்குகள்.

வாரம் ஒருநாள் கடை மூடவேண்டியதில்லை:—கீழே கண்ட சரக்குகளை மட்டில் வியாபாரம் செய்யும் கடைகளுக்கு ஷாப் சட்டத்தின் செக்ஷன் 11 (1)ல் கண்ட விதி கிடையாதென்று, (அதாவது, வாரத்தில் ஒரு நாள் கடைகள் மூடப்படவேண்டுமென்ற விதி கிடையாதென்று) 12-6-1951 தேதி கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட அறிக்கை மூலம், விதிவிலக்கு அளிக்கப்பட்டது. அதாவது, (1) காய்கறிகள் (2) மாமிசம் (3) மீன் (4) பால், தயிர், வெண்ணெய், நெய் (5) ரொட்டி (6) புஷ்பம் (7) மருந்து (8) வைத்திய சாமான்கள் பாண்டேஜ் முதலியவை (9) செய்திப் பத்திரிகைகள். இவைகளில் ஒன்றோ பலவற்றிலோ மட்டில் வியாபாரம் செய்யும் கடைகளுக்குத்தான் இவ்விதி விலக்கு அளிக்கப்பட்டது. இதில் 8 ஆவது ஐடமாகக் கண்டிருப்பது கீழே கண்டபடி திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. (8) ரண சிகிச்சை ஆயுதங்கள், பாண்டேஜ் அல்லது மற்ற வைத்திய சாதகங்கள், பல் விளக்கும் பேஸ்ட், (தேத் பேஸ்ட்) பல்விளக்கும் பிரஷ் (தேத் பிரஷ்) மருந்து சோப்புக்கள் - இவைகளும் மேற்கண்ட ஜாப்தாவில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

(11-3-1952 - சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் I-பக்கம் 337.)

ஷாப் சட்ட ரிஜிஸ்டர்கள் வேண்டியதில்லை:—எழுதப் படிக்கத் தெரியாத நபர்களால் நடத்தப்படும் கசாப்புக் கடைக்காரர்கள் ஷாப் சட்டத்தின் 47 ஆவது செக்ஷனில் கண்டபடி ஷாப் சட்ட ரிஜிஸ்டர்களோ, நோட்டீசுகளோ வைத்துக் கொள்ளவேண்டியதில்லை.

இவ்விதம் ரிஜிஸ்டர்கள் கணக்குகள் முதலிய வைத்துக்கொள்ள மட்டில் அவர்கள் ஒரு குமாஸ்தா வைத்துக்கொள்ள நேரிடுமென்று ஷாப் இன்ஸ்பெக்டருக்குத் திருப்திகரமாகத் தோன்றினால்தான் இவ்விதி விலக்கு உண்டு. விதி விலக்கு அளிக்கப்பட்டவர்களும் 'விசிட்' புத்தகம் வைத்துக்கொள்ள வேண்டும்.

(11-3-1952 - சென்னை - சர்க்கார் கெஜட்-பாகம் I - பக்கம் 337.)

தொழிற்சாலைச் சட்ட விதி திருத்தம்.

தொழிற்சாலைச் சட்டத்தின் செக்ஷன் 54, 55, 56 இன்படி 18 வயது பூர்த்தியான ஒரு தொழிலாளரைச் சாதாரணமாய், ஒரு தினத்தில் 9 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யச் சொல்லவும் அனுமதிக்கவும் கூடாது; தொடர்ந்த 5 மணி வேலைக்குப் பிறகு குறைந்தது அரை மணி நேரமாவது இளைப்பாற இடைவேளை கொடுக்கவேண்டும்; பிறகுதான் மறுபடியும் வேலை ஆரம்பிக்கலாம்; வேலை நேரம், இடை வேளை இரண்டும் சேர்ந்து தொடர்ந்த ஒரு 10½ மணி நேரத்திற்குள் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் தொழிற்சாலைச் சட்ட விதிகளின் 84 ஆவது ஷரத்தில் சில வகைத் தொழில்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வரையில் அவரவர்களுக்கான சில விதி விலக்குகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவ்விதி விலக்குகளுடன் கீழே கண்ட விதி விலக்கும் இப்பொழுது சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதாவது:—நல்லெண்ணெய் ஆட்டும் செக்குகளில், தயாரிப்பு வேலை முறையில் அமர்ந்துள்ள எல்லாத் தொழிலாளர்களுக்கும் செக்ஷன் 56 இல் கண்ட விதி கிடையாது. அதாவது வேலை நேரம், இடை வேளை இரண்டும் சேர்ந்து ஒரு தொடர்ந்த 10½ மணி நேரத்திற்குள் அமைந்திருக்கவேண்டுமென்ற விதி இவர்களுக்குக் கிடையாது. ஆனால் அவ்வித வேலை நேரம் தொடர்ந்த 12 மணிக்கு மேற்பட்டு நீடிக்கக்கூடாது; மேலும் ஒவ்வொரு தொழிலாளரும் வேலை செய்யும் மணி நேரத்தை வேலை ரிஜிஸ்டரில் பதிவு செய்யவேண்டும்.

(12-2-1952-சென்னை-சர்க்கார் கெஜட்-ஸப்ளிமெண்ட்-பாகம் I-பக்கம் 31.)

சென்னை அறநிலையப் பாதுகாப்புச் சட்ட விதிகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

[சென்னை அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் எனப்படும் சென்னை இந்துமத-தர்ம பரிபாலனச் சட்டத்தின் ஷரத்துக்களை அனுசரித்து, சென்னைச் சர்க்காரால் விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்விதிகள் "வக்கீல்"—1952 பிப்ரவரி இதழ் முதல் தொடர்ச்சியாக விளக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இச்சட்டத்தின் சுருக்கம் "வக்கீல்" 1951 அக்டோபர், நவம்பர் இதழ்களிலும், 1952 ஜனவரி இதழிலும், அட்டவணைகளுடன் விளக்கப்பட்டிருப்பதை நேயர்கள் கவனிக்கவும். கீழே இருப்பது சென்ற மாதம் விளக்கப்பட்ட இச்சட்ட 'விதி'களின் தொடர்ச்சி.]

மத ஸ்தாபனங்களின் நகைகள், தஸ்தவேஜுகள் முதலியவை யாரிடம் இருக்கவேண்டும்.

ஒரு மதஸ்தாபனத்தில் உத்தியோகம் வகிப்பவர் அல்லது ஊழியர் எவரும், (கமிஷனருடைய பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு இருந்தாலொழிய) அம்மதஸ்தாபனத்தின் நகை அல்லது ஆபரணங்களையோ வேறு விலை உயர்ந்த சாமான்களையோ தங்களுடைய சுவாதீனத்தில் வைத்திருக்க உரிமை இல்லை. இது சம்பந்தமாக, ஸ்கீம், டிகிரி, மாமூல் அல்லது ஆசாரம் இவைகள் வேறு விதமாக இருந்தாலும், அவை செல்லமாட்டா, என்று செக்ஷன் 36இல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் சம்பந்தமாய் இப்பொழுது சர்க்காரால் விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவையாவன:—

டிரஸ்டிகள் இதற்கான நமூனைப்படி ஒரு 'ரிஜிஸ்டர்' வைத்துக்கொள்ள வேண்டும். அதில் அந்த மதஸ்தாபனத்துக்குச் சொந்தமான நகைகள், தங்கச் சாமான்கள், வெள்ளிச் சாமான்கள், பாத்திரங்கள், வேறு விலை உயர்ந்த பண்டங்கள் இவைகளின் ஜாப்தா ஒன்று விவரமாயும், வைரம் சிகப்பு முதலிய கல்களின் விவரங்களுடனும் பதிவு செய்து வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொன்றுக்கும் மதிப்பு எவ்வளவு என்றும் அதில் குறிப்பிடவேண்டும். புதிதாக வரும் நகை முதலியவைகளையும், கெட்டுப் போன அல்லது விற்கப்பட்டவைகள் மாற்றி அமைக்கப்பட்டவைகள் இவைகளின் விவரமும் காணப்படவேண்டும். இவைகளைப் பந்தோபஸ்தாக வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்வது டிரஸ்டிகளின் கடமையாகும். சரியான பூட்டுக்கள் உள்ள இரும்புப் பெட்டி அல்லது வேறு பெட்டி அல்லது வசதிகளை டிரஸ்டிகள்தான் செய்யவேண்டும். இவைகளைப் பந்தோபஸ்தாக வைக்க, அவசியமானால், ஒரு பிரத்தியேக பந்தோபஸ்து அறை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

தங்கம் அல்லது வெள்ளி வாகனங்கள் அல்லது பல்லக்குகள் வைக்கப்பட்டிருக்கும் மண்டபம் அல்லது அறைகளைப் பூட்டி வைக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். வாகனங்கள் தூசி படியாமல் மூடப்பட்டிருக்கவேண்டும். 'எக்சிகூடிவ் ஆபீசர்' என்ற நிர்வாக உத்தியோகஸ்தர் இல்லாத ஸ்தாபனங்களில், ஒரு டிரஸ்டி மட்டில் இருந்தால் அவருடைய பொறுப்பில் அவருடைய வசத்திலேயே நகைகள் முதலியவைகளை அவர் வைத்துக் கொள்ளவேண்டும். அதிக டிரஸ்டிகள் இருந்தால், இரு டிரஸ்டிகளுடைய கூட்டுப் பொறுப்பிலும் கூட்டு ஜவாப்தாரியிலும் இவைகள் இருக்கவேண்டும். அதாவது, டிரஸ்டிகளின் அக்கிராசனர் ஒருவர்; டிரஸ்டிகள் சேர்ந்து இதற்காகப் பொருக்கிக் கொள்ளும் டிரஸ்டி ஒருவர்; இவ்விருவர்களும் பொறுப்பாளிகள். நிர்வாக உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்தாபனங்களில், அவரும் டிரஸ்டியும் சேர்ந்த கூட்டுப் பொறுப்பில் இவை

களை வைத்துக் கொள்ளவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட டிரஸ்டிகள் இருந்தால் டிரஸ்டிகளின் 'சேர்மென்' அதாவது அக்கிராசனரும் நிர்வாக உத்தியோகஸ்தரும்தான் கூட்டுப் பொறுப்புள்ளவர்கள். கூட்டுப் பொறுப்பு இருந்தால், இரும்புப் பெட்டி அல்லது வேறு பெட்டிகளுக்கும், பந்தோபஸ்து அறை இருந்தால் அதற்கும், ஒவ்வொன்றுக்கும் இரண்டு பூட்டுக்களும் இரண்டு சாவிகளும் இருக்கவேண்டும். ஒவ்வொருவரிடமும் ஒரு சாவி இருக்கவேண்டும். பூட்டு சாவிகள் ஒரே வகையான இருக்கக் கூடாது. ஒரு நகை அல்லது சாமானை வெளியே எடுக்கக் கூட்டுப் பொறுப்புள்ள இருவரும் அல்லது அவர்களுடைய ஏஜண்டுகளும் ஆஜரில் இருக்கவேண்டும். தினசரி உபயோகத்தில் இல்லாத நகை முதலியவற்றை உற்சவ காலங்களிலும் விசேஷ நாட்களிலும் அந்த ஸ்தாபனத்தின் ஊழியரிடம் ஒப்படைக்கலாம். ஆனால் நகை யாரிடம் ஒப்படைக்கப்படுகிறதோ, அவரிடம் எழுத்து மூலம் ரிஜிஸ்டரில் ரசீதும், அவைகள் கெட்டுப்போனால் தாம் நஷ்டஈடு கொடுப்பதாக ஒரு ஒப்பந்தமும் வாங்கிக் கொண்டுதான் இவைகளை அவரிடம் கொடுக்க வேண்டும். அவரிடம் ஒப்படைக்கப்படும் நகை முதலியவற்றின் விவரம், எத்தனை நாட்களுக்கு ஒப்படைக்கப்படுகிறது என்ற விவரங்கள் எல்லாம் பதிவு செய்துகொள்ளப்பட வேண்டும். ஒரு நாளைக்கு மேற்பட்ட காலத்திற்கு இவைகள் அவரிடம் இருக்கவேண்டுமானால், அவர் அவைகளைப் பந்தோபஸ்தாக வைத்துக்கொள்ள வசதிகள் செய்து தரவேண்டும். உற்சவம் அல்லது விசேஷ தினம் முடிந்ததும் அவர் இவைகளை திருப்பிக் கொடுத்து அதையும் ரிஜிஸ்டரில் பதியவேண்டும். டிரஸ்டியின் பொறுப்பில் எல்லா நகை முதலியவைகளையும் அர்ச்சகரிடமோ வேறு ஊழியரிடமோ ஒப்படைக்கவும் டிரஸ்டிகளுக்கு உரிமை உண்டு. ஆனால் அப்படிச் செய்யுமுன் அவர்களிடம் எழுத்து மூலம் ரசீது, நஷ்டஈடு தஸ்தவேஜி இவைகளை வாங்கிக்கொள்ளவேண்டும், இவ்விதம் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் அவைகளைத் தேவையான காலங்களில் சோதனை செய்யவும் டிரஸ்டிக்கு உரிமை உண்டு. ஏற்கனவே ஏற்பட்ட ஸ்கீம் அல்லது டிக்ரிகளின்படி எந்த உத்தியோகஸ்தர் அல்லது ஊழியரிடமாவது நகை முதலியவைகள் இருக்கவேண்டுமென்று ஏற்பட்டிருந்தாலும், அவரிடம் ஒரு சாவியும் டிரஸ்டி நிர்வாக உத்தியோகஸ்தர் இவர்களிடம் ஒரு சாவியும் இருக்கவேண்டும். இவ்வித ஊழியர்களிடம் ஜாமீன் வாங்கிக்கொள்ள கமிஷனருக்கு அதிகாரம் இருக்கிறது.

தஸ்தவேஜுகள்

மதஸ்தாபனத்திற்குச் சொந்தமான தஸ்தவேஜுகள் சர்க்கார் பத்திரங்கள், சர்ட்டிபிகேட்டுகள், பாங்கு ரசீதுகள், அடமானப் பத்திரங்கள், பாண்டுகள், பிராமிசரி நோட்டுகள் முதலியவைகளும் மேற்கண்டபடி கூட்டுப் பொறுப்பிலேதான் வைத்துக்கொள்ளப்படவேண்டும். தஸ்தவேஜுகளுக்கும் விவரமான ஒரு ரிஜிஸ்டர் வைத்துக் கொள்ளப்படவேண்டும். தஸ்தவேஜுகளின்படி வசூல் செய்யவேண்டிய தொகைகளைக் காலாவதி இல்லாமல் வசூல் செய்யவேண்டியதும் அவைகளைப் பந்தோபஸ்தாக வைத்துக் கொண்டிருப்பவர்களின் கூட்டுப் பொறுப்பாகும். அவை காலாவதியாகி, ஸ்தாபனத்திற்கு நஷ்டம் ஏற்பட்டால் இருவரும் ஜவாப்தாரிகள் ஆவார்கள். நிர்வாக உத்தியோகஸ்தர் இல்லாத ஸ்தாபனங்களில் தஸ்தவேஜிகளை வைத்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு டிரஸ்டிகளின் அக்கிராசனருடையது. காலாவதியாகிப் போனால் அவர்தான் நஷ்டஈடு செய்யக் கடமைப்பட்டவர். மேலே கண்ட முக்கியமான தஸ்தவேஜுகள் தவிர மற்றத் தஸ்தவேஜுகள் நிர்வாக உத்தியோகஸ்தரிடம் இருக்கவேண்டும். நிர்வாக உத்தியோகஸ்தர் இல்லாவிட்டால் டிரஸ்டி அல்லது டிரஸ்டிகளின் அக்கிராசனர் அந்த ஸ்தாபனத்தின் எந்த உத்தியோகஸ்தரிடமும் இவைகளை ஒப்படைக்கலாம். தஸ்தவேஜுகளைப்பற்றி 'ஸ்கீமி'ல் ஏதாவது சொல்லப்பட்டிருந்தால் அதன்படியேதான் நடக்க வேண்டும்.

(தொடரும்)

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

தாய்வீடு சென்ற மனைவியை அடைய ஹைகோர்ட்டுக்குப் புருடனின் மனு.

[ஆதாரம்:—1952-ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—மதராஸ்-98.]

'மைனர்'ராக இருக்கும் மனைவிக்கு அவளுடைய புருடன்தான் சட்ட பூர்வமான 'கார்டியன்'. மைனரைத் தம்முடன் வைத்துக் கொண்டு மைனருடைய போஷணை, ஆரோக்கியம், படிப்பு முதலிய விஷயங்களைக் கவனிக்கக் கார்டியனுக்குத் தான் உரிமை. கார்டியனிடம் இருக்கவேண்டிய ஒரு மைனரை வேறு எவர் தமவசம் வைத்துக்கொண்டிருந்தாலும், மைனர் தம்முடைய வசத்தில் ஒப்படைக்கப்பட வேண்டுமென்று, கார்டியன் மனுப் போடலாம். இவ்விதம் போடப்படும் மனுக்களுக்கு, 'ஹேபஸ் கார்ப்பஸ்' மனுக்கள் என்று பெயர். இவை கிரிமினல் வழக்கு முறைச் சட்டத்தின் (The Criminal Procedure Code.) 491 வது ஷரத்துப்படி ஹைகோர்ட்டில் போடப்பட வேண்டும். கார்டியனிடம் இல்லாத மைனர்களைக் கார்டியன் தம் வசம் அடைய இது ஒரு குறுக்கு வழி. ஆனால் கார்டியன்ஸ் அண்டு வார்ட்ஸ் ஆக்ட் (The Guardians and Wards Act—1890) என்ற சட்டப்படி ஜில்லா கோர்ட்டில் மனுப்போட்டு, வேறு ஒருவரிடத்தில் இருக்கும் மைனரைத் தம் வசம் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்கவும் சட்ட பூர்வமான கார்டியனுக்கு உரிமை உண்டு.

பிரஸ்தாப வழக்கில் 20 வயதுள்ள ஒரு மாணவர் 17 வயதுள்ள தம்முடைய மைனர் மனைவியை, அவளுடைய தாயும் சகோதரர்களும் சட்ட விரோதமாகத் தங்களிடம் வைத்துக் கொண்டிருக்கிறார்களென்றும்; அவளைத் தம் வசம் வரவழைத்துக் கொடுக்க வேண்டுமென்றும் அவர்கள்மீது ஹைகோர்ட்டுக்குக் கிரிமினல் வழக்கு முறைச் சட்டத்தின் 491 ஆவது ஷரத்துப்படி ஒரு மனுச் செய்தார். மனைவியின் தாயும் சகோதரர்களும் இதற்குப் பதில் சொன்னார்கள். அதாவது, மனுதாரின் மனைவி, அவளுடைய கணவன் வீட்டை விட்டு வந்ததற்குத் தாங்கள் பொறுப்பாளிகள் அல்ல என்றும், அவளுடைய அபிப்பிராயத்திற்கு விரோதமாகத் தாங்கள் அவளைத் தங்கள் வசம் வைத்துக் கொண்டிருக்கவில்லை என்றும் சொன்னார்கள். மைனர் மனைவியும் தம் தாயுடன் கோர்ட்டில் ஆஜராகி, தன்னுடைய கணவன் வீட்டிலிருக்கும் கணவனுடைய தாயார், பாட்டி இவர்களுடைய இம்சையைத் தாங்க மாட்டாமல் தானே தான் தன்னுடைய தாய் வீடு வந்து விட்டதாகவும், இதற்கு அவளுடைய தாயோ சகோதரர்களோ ஜவாப்தாரிகள் அல்லர் என்றும் சொன்னாள்.

இம்மனுவை விசாரித்த நீதிபதிகள் கணவனின் மனுவைத் தள்ளி விட்டனர். இவ்விதமான சந்தர்ப்பங்களில், கார்டியன்ஸ் அண்டு வார்ட்ஸ் சட்டத்தின் 25 ஆவது செக்ஷன்படி ஜில்லா கோர்ட்டில் மனுப்போட்டு மைனரைத் தம் வசம் அடைவது தான் சரியான வழி என்று நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். தகாத முறையில் யாதொரு சம்பந்தமுமில்லாதவர்கள் மைனர்களைச் சட்ட விரோதமாகத் தங்கள் வசம் எடுத்துக்கொண்டுபோய், மிகத் துரிதமாக அவர்களைக் கார்டியன் வசம் திருப்பிக்கொண்டுவர வேண்டி இருந்தால் மட்டில் கிரிமினல் வழக்கு முறைச் சட்டப்படி ஹேபஸ் கார்ப்பஸ் என்ற மனுப்போட்டு அதன் மூலம் அவசர பரிகாரம் அடையலாமே ஒழிய

மற்றச் சாதாரண சந்தர்ப்பங்களில் சாதாரண முறைப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்வது தான் சரி என்று நீதிபதிகள் இது சம்பந்தமான சட்டத்தை விளக்கி இருக்கின்றனர்.

* * *

ஷிரூர் மடத்தைப் பற்றிய சென்னை ஹைகோர்ட் தீர்ப்பு. இந்துமத தர்ம பரிபாலனச் சட்டத்தில் செல்லாத ஷரத்துக்களின் விவரம்.

ஷிரூர் மடாதிபதி ஸ்ரீ லக்ஷ்மீந்திர தீர்த்த சுவாமியார் அவர்கள் சென்னை இந்துமத தர்ம பரிபாலன போர்டின்மீது சென்னை ஹைகோர்ட்டில் தொடுத்த C. M. P. No. 2591/1951; W. P. Nos. 379, 380/1951 ரிட் மனுக்களில் 13-12-1951-ல் நீதிபதிகள் சத்திய நாராயண ராவ் அவர்களும் ராஜகோபாலன் அவர்களும் அளித்த தீர்ப்பின்படி 1951-ஆம் வருடத்திய சென்னை இந்துமத தர்மபரிபாலனச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் ஷரத்துக்களை (செக்ஷன்களை) இயற்றச் சென்னைச் சட்டசபைக்கே அதிகாரமில்லை என ஏற்படுகிறது. அவையாவன:—

செக்ஷன் 20. (எல்லா மதஸ்தாபனங்களையும் மேற்பார்வை பார்த்த எவ்விதமான உத்தரவுகள் செய்யவும் கமிஷனருக்கு சர்வ அதிகாரம் கொடுக்கும் பொது ஷரத்து) செக்ஷன் 21. (கமிஷனர், டிப்டி கமிஷனர், உதவி கமிஷனர் இன்னும் மற்ற அதிகாரிகள் பிரதேச கமிட்டியார் எல்லா மதஸ்தாபனங்களுக்குள்ளும் பூஜை நடக்கும் எந்த இடத்திற்குள்ளும நுழையலாம் என்பது.)

செக்ஷன் 25 (4). (மதஸ்தாபனம் சம்பந்தமான ரிஜிஸ்டரில் கமிஷனருக்கு யுக்தமான திருத்தங்கள் செய்யும்படி உத்தரவிடலாமென்பது.) செக்ஷன் 31. (எந்த மதஸ்தாபனத்தின் உபரி வருமானத்தையும் டிப்டி கமிஷனருடைய அனுமதியின் பேரில் வேறு உபயோகப் படுத்தலாம் என்பது) செக்ஷன் 53. (மடாதிபதியின் ஸ்தானம் காலியாக இருக்கும்போது, மைனர் அல்லது பைத்தியமாக இருக்கும் போதும் உதவி கமிஷனர், கமிஷனர் இவர்கள் மடத்தின் சொத்துக்களைக் கைவசப்படுத்தி, பாதுகாத்து வரலாம் என்பது.) செக்ஷன் 54. (மடங்களின் திட்டத்தை கமிஷனருக்கு அனுப்புவது பற்றிய ஷரத்து) செக்ஷன் 55(2). (மடாதிபதிகளுக்குக் கொடுக்கப்படும் பாத காணிக்கைகளுக்கு அவர்கள் கணக்கு வைத்துக் கொண்டு கமிஷனர் கேட்கும்போது தாக்கல் செய்யவேண்டுமென்ற ஷரத்து) செக்ஷன் 56. (மடங்களுக்கு மானேஜர் நியமிக்க வேண்டியது பற்றிய ஷரத்து.) செக்ஷன் 58(3). (மடங்களுக்கு ஸ்கீம் ஏற்படுத்துவது பற்றியது) செக்ஷன் 59. (மதஸ்தாபனங்களின் சொத்துக்களை வேறு விஷயங்களில் செலவு செய்வது பற்றி) செக்ஷன் 63 முதல் 69 வரை:— (அறிக்கை யிடப்பட்ட மத ஸ்தாபனங்களைப் (Notified Religious Institution) பற்றிய அத்தியாயம் 6.) செக்ஷன் 70 (2) (3) (4). (பட்ஜெட் என்ற வரவு செலவுத் திட்டத்தைப் பற்றியது). செக்ஷன் 76. (ஒவ்வொரு மத ஸ்தாபனமும் சர்க்காருக்குத் தங்கள் வருமானத்தைப் பொறுத்து ஒரு கட்டணம் (Contribution) கட்டிவர வேண்டுமென்பது பற்றிய ஷரத்து. செக்ஷன் 89. (இச் சட்டத்தை மீறும் டிரஸ்டிகளுக்குத் தண்டனை விதிக்கும் ஷரத்து.) செக்ஷன் 90. (ஸ்டாம்பு பற்றியது)

கீழே கண்ட ஷரத்துக்கள் மடங்கள் சம்பந்தப்பட்டவரை செல்லாவெனவும் தீர்ப்பளிக்கப்பட்டது. செக்ஷன் 20, 21, 25(4) 26. செக்ஷன் 28. (மடத்தின் சொத்துக்களையும் தஸ்தவேஜுக்களையும் கமிஷனர் முதலிய அதிகாரிகள் சோதனை செய்வது பற்றிய ஷரத்து.) செக்ஷன் 29. (மடத்தின் சொத்துக்களைப் பராதீனம் செய்வது பற்றி) செக்ஷன் 30(2). மடத்தின் வருமானத்தைச் சில செலவுகள் செய்ய, கமிஷனருடைய அனுமதி வேண்டுமென்பது.) செக்ஷன் 55(2); 56; 58(3) 59; 63 முதல் 69 வரை; 76; 89. (இவை என்ன என்று முன் பாராவில் பார்க்கவும்.)

* * *

கோர்ட்டில் நடக்கும் ஒரு வழக்கைப் பற்றி நீதிபதிக்குக் கடிதம் எழுதிய கிராமப் பஞ்சாயத்தார்கள் தண்டிக்கப்பட்டனர்.

[ஆதாரம்:—1952 - ஆல் இந்தியா ரிப்போர்ட்டர்—அலகாபாத்—86.]

மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஒரு வழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்தது. அதாவது, எதிரிகள் கெட்ட நடத்தை உள்ளவர்கள் என்றும், அவர்கள் திருடுவதையே தொழிலாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், அவர்களிடம் நன்னடத்தைக்கு ஜாமீன் வாங்க வேண்டுமென்றும் எதிரிகள் மீது போலீசார் வழக்குத் தொடர்ந்திருந்தனர். போலீஸ்

பக்கத்தில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அந்த ஊர் கிராம - பஞ்சாயத்துத் தலைவர், உபதலைவர், மற்றும் இரண்டு மெம்பர்களும் சர்க்கார் தரப்பில் எதிரிகளுக்கு விரோதமாகச் சாட்சி சொன்னார்கள். பிறகு எதிரிகள் தங்கள் தரப்பில் ஏராளமான சாட்சிகளை விசாரித்துக் கொண்டிருந்தனர். இந்தச் சமயத்தில், ஏற்கனவே சர்க்கார் தரப்பில் சாட்சி சொன்ன பஞ்சாயத்துத் தலைவர், உபதலைவர், மற்றும் இரண்டு நபர்களும், மாஜிஸ்ட்ரேட்டுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதாவது, எதிரிகள் தங்களுடைய தரப்பில் விசாரித்துவரும் சாட்சிகள் எல்லோரும் எதிரிகளுடைய உறவினர்கள் என்றும், அவர்கள் கோர்ட்டை ஏமாற்றுகிறார்கள் என்றும் அக்கடிதத்தில் கண்டிருந்தது. எதிரிகள் விசாரித்து வரும் சாட்சிகளின் பெயர்களும், அவர்கள் இனி விசாரிக்கப் போகும் சாட்சிகளின் பெயர்களும், அவர்கள் எப்படி எதிரிகளுக்கு உறவு என்றும் அக்கடிதத்தில் விவரமாகக் காணப்பட்டிருந்தது.

இக்கடிதத்தைப் பெற்றுக் கொண்ட மாஜிஸ்ட்ரேட் அதைப்பற்றி ஒன்றும் செய்யவில்லை. ஆனால் அவர் எதிரிகளிடம் நன்னடத்தைக்கு ஜாமீன் வாங்க வேண்டுமென்று அவ்வழக்கில் தீர்ப்பளித்தார். எதிரிகள் சிலர் செஷன்ஸ் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர். அங்கே அவர்களுடைய அப்பீல் தள்ளப்பட்டது. அதன் பேரில், எதிரிகள் அலகாபாத் ஹைகோர்ட்டுக்கு, 'ரிவிஷன்' மனுச்செய்தனர். இதை விசாரித்த உயர்நீதிபதி அவர்கள், எதிரிகள்மீது ஜாமீன் வாங்கப் போதுமான சாட்சியங்கள் இல்லை என்றும்; எதிரிகள் தங்களுடைய சார்பில் விசாரித்த அதே கிராம வாசிகளான 35 சாட்சிகளையும் மாஜிஸ்ட்ரேட் நம்பாமல் போனது சரி அல்ல என்றும், பஞ்சாயத்துத் தலைவர் முதலியவர்கள் எழுதிய கடிதத்தினால்தான் மாஜிஸ்ட்ரேட்டானவர் அவ்விதம் செய்தார் என்றும் உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு, எதிரிகள் மீது எடுக்கப்பட்ட ஜாமீன் நடவடிக்கையை ரத்துச் செய்தனர். அத்துடன் நிற்கவில்லை. கோர்ட்டில் வழக்கு நடந்து கொண்டிருக்கும்போது மாஜிஸ்ட்ரேட்டின் மனதைத் திருப்பும் எண்ணத்துடன் அவருக்குக் கடிதம் எழுதுவது "கோர்ட்டை அவமதிப்பது" (Contempt of Court) என்ற குற்றமாகையால் அக்கடிதம் எழுதியவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கும்படி உத்தரவிட்டனர். இதைப்பற்றி வேறு இரண்டு உயர் நீதிபதிகள் விசாரித்தனர். ஒரு ஹைகோர்ட்டுக்குட்பட்ட எந்தக் கோர்ட்டையும் யார் அவமதித்தாலும், அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க ஹைகோர்ட்டுக்கே அதிகாரம் உண்டு. அந்த அதிகாரத்தை உபயோகித்துத்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டவுடன், கடிதம் எழுதிய கிராமப் பஞ்சாயத்தார்கள் உடனே ஹைகோர்ட்டில் ஆஜராகி வக்கீல் மூலம் ஹைகோர்ட்டாரின் மன்னிப்பைக் கோரினர். மன்னிப்புக் கோரும் மனுவில் தாங்கள் செய்தது தவறு என்பதை வியக்தமாக ஒப்புக்கொள்ளாமல் தாங்கள் ஏதோ நல்ல எண்ணத்தின் பேரில் தான் இக்கடிதம் எழுதியதாகவும், அப்படிச் செய்தது சரி போலும்; இருந்தாலும் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும் பாவனையில் இம்மன்னிப்பு மனு இருந்தது. ஆகையால் இம்மன்னிப்பு மனுவை உயர் நீதிபதிகள் ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு கோர்ட்டில் ஒரு வழக்கு நடந்து கொண்டிருக்கும்போது அதைப்பற்றி நீதிபதிக்குக் கடிதம் எழுதி, அதன் மூலம் அவருடைய மனதைத்திருப்ப முயல்வதானது கோர்ட்டை அவமதிக்கும் குற்றங்களில் ஒரு பெரிய குற்றமாகுமென்றும்; இவ்வழக்கில் இப்படிக் கடிதம் எழுதியவர்கள் படித்தவர்களாயும், கிராம பஞ்சாயத்தில் பொறுப்புள்ள பதவி வகிப்பவர்களாயும் இருப்பதால், இவர்களுக்கு அபராதம் மட்டில் விதிப்பது போதாதென்று உயர் நீதிபதிகள் கருதி, கடிதம் எழுதியவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு மாதம் சிறைத் தண்டனை விதித்தனர். அத்துடன் சர்க்கார் தரப்பின் செலவு தொகைகளை அவர்களே கொடுக்கும்படியும் உத்தரவிட்டனர். இக்கடிதம் எழுதப் பட்டதைப்பற்றி மாஜிஸ்ட்ரேட்டோ, செஷன்ஸ் ஜட்ஜோ எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் போனது வருந்தத்தக்கதென்றும் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப் பட்டனர். இனி இவ்விதக் கடிதங்கள் வந்தால் கீழ்க் கோர்ட்டுகள் உடனே அவைகளைப்பற்றி ஹைகோர்ட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்றும் உயர் நீதிபதிகள் விரும்பினர்.

* * *

பொதுக் கடனைத் திருப்பிக் கொடுப்பதில் ஏற்பட்ட வழக்கு.

[ஆதாரம்:—1952 - ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—சுப்ரீம் கோர்ட்—பக்கம் 47-சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு.]

எனக்கு ரூபாய் 100 வேண்டும். உங்களுக்கு ரூபாய் 200 வேண்டும், நமது நண்பருக்கு

ரூபாய் 300 வேண்டும். நாம் மூவரும் சேர்ந்து இதற்காக ஒருவரிடம் பொதுவாக ரூபாய் 600 கடன் வாங்கினால், அக்கடனையும் அதன் வட்டியையும் திருப்பிக் கொடுக்கும்போது, நான் எவ்வளவு கொடுக்க வேண்டும்; நீங்கள் எவ்வளவு கொரடுக்கவேண்டும்; நமது நண்பர் எவ்வளவ கொடுக்கவேண்டும்? இதில் என்ன சந்தேகம் இருக்கிறது? நான் எடுத்துக்கொண்ட ரூபாய் 100 ஐயும் அதற்குள்ள வட்டியையும் நான் கொடுக்கவேண்டும்; நீங்கள் எடுத்துக் கொண்ட ரூபாய் 200 ஐயும் அதன் வட்டியையும் நீங்கள் கொடுக்க வேண்டும். அவ்விதமே நமது நண்பர் எடுத்துக் கொண்ட ரூபாய் 300 ஐயும் அதன் வட்டியையும் அவர் கொடுக்க வேண்டும். இந்த வீதாசாரப்படியே நாம் வாங்கிய பொதுக் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். இவ்விதம் நாம் திரும்பிக் கொடுக்கா விட்டால் கடன் கொடுத்தவர் நமக்குள் இருச்கும் இந்தக் கணக்கு வழக்குகளைக் கவனிக்க மாட்டார். கவனிக்க வேண்டிய கடமையும் அவருக்கு இல்லை. அவர் ஜாடா அசல் வட்டித் தெகையையும் நம்மில் யாராவது ஒருவரிடமே வசூல் செய்து விடலாம். அப்படி அவர் வசூல் செய்தாலும், அவருக்கு ஜாடா கடன் தொகையையும் நம்மில் யார் கொடுத்தாரோ அவருக்கு மற்ற இருவரும் அவரவர் அடைந்த தொகைப்படி வீதாசாரமாக நஷ்ட ஈடு (Contribution) செய்ய வேண்டியது தானே சரி. இது மிக சுலபமாகத்தானே உங்களுக்குத் தோன்றுகிறது! ஆனால் இது சம்பந்தமான சட்டம் அவ்வளவு சுலபமாக இல்லை.

இப்பொதுக் கடனை எந்த வீதாசாரப்படி நாம் திருப்பிக் கொடுக்க வேண்டும், யார் யார் எவ்வளவு தொகை திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று நமக்குள் 'ஒப்பந்தம்' அல்லது ஏற்பாடு இருக்கிறதா? நாம் வாங்கிய கடன் சாதாரண பாண்டு அல்லது வெண்ணிலைக் கடனா; அல்லது சொத்து அடமானத்தின் பேரில் வாங்கப்பட்ட கடனா?—என்ற விஷயங்களைப் பொறுத்து இருக்கிறது நாம் ஒவ்வொருவரும் திருப்பிக் கொடுக்க வேண்டிய தொகை.

கடன் வாங்கியது அடமானக் கடனாக இருந்தாலும் சரி, வேறு வகைக் கடனாக இருந்தாலும் சரி, நாம் மூவரும் ஒருவருக் கொருவர் இப்பொதுக் கடன் தொகையில் யார் யார் எவ்வளவு எவ்வளவு தொகை அல்லது வீதாசாரம் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று, நமக்குள் வியக்தமாய் ஒரு ஒப்பந்தம் (Contract) அல்லது ஏற்பாடு செய்து கொண்டிருந்தால், அதன்படிதான் ஒவ்வொருவரும் அக்கடன் தொகையைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். ஒருவர் கொடுக்காவிட்டாலும், அவரிடமிருந்து இந்த ஒப்பந்தப்படிக்கான தொகையைத்தான், முழுக்கடனையும் கொடுத்தவர் வசூல் செய்யலாம்.

இவ்வித ஒப்பந்தம் ஒன்றுமில்லர்மலும், நாம் வாங்கியது அடமானக் கடன் அல்லாமலும் இருந்தால், பொதுக்கடன் தொகையை நாம் மூவரும் சமபாகமாகத் திருப்பிக்கொடுக்கவேண்டும். அதாவது, நான் ரூ. 200-ம், நீங்கள் ரூ. 200-ம் நமது நண்பர் ரூபாய் 200-ம், அததன் வட்டியுடன் திருப்பிக் கொடுக்க வேண்டும். நான் பொதுக் கடனில் எடுத்துக் கொண்டது ரூபாய் 100 ஆக இருந்தாலும், 'இக்கடனை எந்த வீதாசாரப்படி நாம் ஒவ்வொருவரும் திருப்பிக் கொடுக்க வேண்டும்'-என்று ஒரு வியக்தமான ஒப்பந்தமோ ஏற்பாடோ செய்து கொள்ளாமல் அலட்சியமாக இருந்தவிட்டபடியால், சட்டத்தில் கண்டிருக்கும் விதம் நான் அதிகத் தொகை கொடுக்க நேரிட்டது. இந்திய ஒப்பந்தச் சட்டம் (Indian Contract Act) என்ற சட்டத்தின் 43 ஆவது செக்ஷனில், அப்படித்தான் இருக்கிறது. அதாவது, வேறு விதமாக 'ஒப்பந்தம்' (Contract) செய்து கொண்டிருந்தாலொழிய, பொதுவாக வாங்கிய கடனை ஒவ்வொருவரும் சமபாகமாகத் திருப்பிக் கொடுக்க, கடன் வாங்கியவருக்குள் ஒருவருக்கொருவர் கடமைப் பட்டிருக்கிறார்கள்—என்றுதான் அதில் இருக்கிறது.

ஆனால் நாம் வாங்கியது அடமானக் கடனாகவும் இருந்து, அதாவது நாம் ஒவ்வொருவரும் அவரவருடைய தனித்தனிச் சொத்தின் பேரில் ஒரே அடமானமாக எழுதிக் கொடுத்து, இப்பொதுக் கடனை வாங்கியும்; திருப்பிக் கொடுப்பதைப் பற்றி நாம் யாதொரு ஒப்பந்தம் செய்து கொள்ளாமலும் இருந்து விட்டால், அதற்குத் தனிச்சட்டம் இருக்கிறது. சொத்து மாற்றல் சட்டத்தின் (Transfer of Property Act) 82, 92 செக்ஷன்களில் இதற்கான சட்ட விதிகள் இருக்கின்றன. அடமானம் (Mortgage) என்பதும் ஒரு வகை ஒப்பந்தமாக இருந்தாலும், 'அடமானம்' சம்பந்தமாகத் தனி விதிகள் இச்சட்டத்தில் இருப்பதால், ஒப்பந்தங்களைப் பற்றிய முன் குறிப்பிடப்பட்ட பொது விதியானது அடமானங்களுக்குப் பொருந்தாது. அடமானம் சம்பந்தமான விசேஷவிதி என்னவென்றால் அடமானக் கடன் வாங்குபவர்களில் ஒவ்வொருவரும், அவரவருடைய அடமான

சொத்தின் மதிப்பு எவ்வளவோ அந்த வீதாசாரப்படிதான் அப்பொதுக் கடனைத் திரும்பக் கொடுக்க வேண்டும். அடமானப் பத்திரத்தில் கண்ட என்னுடைய சொத்து ரூபாய் 3000மும், உங்களுடைய சொத்து ரூ. 2000மும், நண்பருடைய சொத்து ரூபாய் 1000மும் பொறுமானமுள்ளதென்று வைத்துக் கொள்வோம். நாம் வாங்கிய பொதுக் கடன் ரூபாய் 600-ல் நான் ரூ. 300-ம் திருப்பிக் கொடுக்க வேண்டும். நீங்கள் ரூபாய் 200-ம் நண்பர் ரூபாய் 100-ம் திருப்பிக் கொடுக்கவேண்டும். பொதுக் கடனில் நான் அடைத்தது ரூ. 100 ஆக இருந்தாலும், மொத்த அடமான சொத்துக்களில் என்னுடைய சொத்துக்கள் சரிபாதியாக இருப்பதால், கடனிலும் சரிபாதியை நான் கொடுக்க வேண்டுமென்று இவ்விதிகள் நிர்ணயம் செய்கின்றன. கடன் கொடுத்தவர், எந்தச் சொத்தின் மீதிலும் ஜாடாக் கடன் தொகைகளையும் வசூல் செய்து கொள்ளலாம். மேற்கண்ட விதிகள் எல்லாம் கடன் வாங்கியவர்களுக்குள் ஒருவருக் கொருவர் கொடுத்துக் கொள்ள வேண்டிய வீதாசாரத்தைப் பற்றியே. இது சம்பந்தமான சட்டத்தைச் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் பிரஸ்தாப வழக்கில் விளக்கி இருக்கின்றனர். இவ்வழக்கில் பாகம் செய்து கொண்ட மூன்று சகோதரர்கள், தங்களுடைய தனித்தனிச் சொத்துக்களை அடமானமாக வைத்து பொதுவாகக் கடன் வாங்கினார்கள். ஜாடா அடமானத் தொகையும் இவர்களில் ஒருவரிடமே வசூல் செய்யப்பட்டது. அவர் மற்ற இரண்டு சகோதரர்கள் மீதும் சமபாகமாகத் தமக்கு நஷ்டஈடு (Contribution) கிடைக்க வேண்டுமென்று அவர்கள் மீது தாவா செய்தார். மற்றச் சகோதரர்கள் பணம் கொடுக்க வேண்டியதை ஒப்புக் கொண்டனர். ஆனால் சமவீதாசாரமாகக் கொடுக்க வேண்டியதில்லை என்றும், பொதுவாக வாங்கப்பட்ட கடனில் பெரும் பகுதியை வாதியே அடைத்திருப்பதால் அவரவர் எடுத்துக் கொண்ட தொகைப்படிதான் வீதாசாரமாகத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றும், அவ்விதம் அவர்களுக்குள் ஒரு வாய்மொழி ஒப்பந்தம் இருப்பதாகவும் கட்சி ஆடினர். 'ஒப்பந்தம்' என்பது ருசு ஆகவில்லை. ஆகையால் சட்டப்படி, அதாவது அடமானங்களைக் குறித்த முன் விளக்கப்பட்ட விதிகளின்படி அவரவர் அடமானம் வைத்த சொத்துக்களின் மதிப்பின்படி, வீதாசாரமாக, அவரவர் தொகைகள் கொடுக்க வேண்டுமென்று நீதிபதிகள் இவ்வழக்கில் தீர்ப்பளித்தனர். ஜாடாக் கடனையும் முதலில் கொடுத்து அடமானத்திலிருந்து சொத்துக்களை மீட்டிய வாதிக்கு, மற்றச் சகோதரர்கள் அவரவருடைய அடமான சொத்தின் மதிப்பு எவ்வளவோ அதன் வீதாசாரப்படி தொகைகள் கொடுக்க வேண்டுமென்றும் அத்தொகைக்கு அவரவருடைய அடமான சொத்துக்கள் முன் போலவே வாதிக்குச் சேரவேண்டிய தொகைகளுக்கு ஜவாப்தாரியாக (Subrogation) இருக்குமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

* * *

ஒரு தடவை பாகப் பிரிவினை செய்துகொண்டு, அதை ரத்துச் செய்து, மறுபடியும் பிரிவினை செய்து கொள்ள முடியுமா?

[ஆதாரம்:—1942 ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—நாகபுரி—2.]

மூன்று இந்து சகோதரர்கள் அவர்களிடமிருந்த பொதுச் சொத்துக்களைப் பாகம் செய்து கொண்டனர். பாகம் செய்து கொள்ளும்போது, எல்லாச் சொத்துக்களும் தங்களுக்குச் சொந்தமென்றுதான் நினைத்துப் பாகம் செய்து கொண்டனர். ஆனால் அவர்களில், இரண்டு சகோதரர்களுக்கு அப்பாகத்தில் வைக்கப்பட்ட சொத்துக்களில் ஒரு பெரும்பகுதியானது, அவர்களுடைய குடும்பத்திற்கே சொந்தமல்ல என்று, வேறு ஒருவர் கோர்ட்டில் அனந்தர வாரிசு தாவா செய்து, டிக்ரி பெற்று, அச்சொத்துக்களையும் இவ்விரு சகோதரர்களிடமிருந்தும் எடுத்துக்கொண்டு போய்விட்டார். முடிவாகப் பாக பத்திரம் ஏற்பட்ட பின்பு, மேற்கண்ட விதம் அப்பாகச் சொத்துக்களை இழந்த இரு சகோதரர்களும், தாங்கள் செய்து கொண்ட பாகம் சரி அல்ல என்றும், தாங்கள் அச் சொத்துக்களை இழந்ததால் ஏற்படும் நஷ்டங்களையும், மூன்று சகோதரர்களும் சமமாகப் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்றும்; அதாவது, போன சொத்துக்கள் போக, பாக்கி மூவரிடம் இருக்கும் எல்லாச் சொத்துக்களையும் சேர்த்து மறுபடியும் மூன்று சகோதரர்களும் சமமாகப் பிரித்துக் கொள்ள வேண்டுமென்றும், மூன்றாவது சகோதரர் மீது இவர்கள் தாவா செய்தனர்.

மூன்றாவது சகோதரர், இத்தாவாவை ஆட்சேபித்தார். அப்படிச் செய்யச் சட்டம் இடம் கொடுக்காதென்று கட்சி செய்தார். மனுஸ்மிருதியில் உள்ள வாக்கியம் ஒன்றைத் தமக்கு ஆதாரமாகக் காண்பித்தார். அதாவது,

"பாகம் செய்து கொள்வது ஒரு தடவைதான்; கன்னிக்கு மணம் செய்வதும் ஒரு தடவை தான்; ஒரு பொருளைத் தானம் செய்வதும் ஒரே தடவைதான். இம்மூன்றையும் ஒரு தடவை செய்த நல்லோர்கள் அவைகளை மாற்ற மாட்டார்கள்" என்று மனுஸ்மிருதியின் 9-ஆவது அத்தியாயத்தில் ஒரு விதி இருக்கிறது. மற்ற இரண்டு விஷயங்களைப்பற்றி இப்பொழுது சட்டம் எப்படி இருந்தாலும்—பாகம் செய்து கொள்வது சம்பந்தமாக இப்பொழுதுள்ள சட்டம் என்னவென்றால்:—பொதுச் சொத்துக்களைப் பாகம் செய்து கொண்டவர்கள், அப்பிரிவினையை, சாதாரணமாய் மாற்ற முடியாது. ஆனால் தங்களுக்கே சம்பந்தமில்லாத சொத்துக்கள் மோசடியினாலோ, தவறாலோ (Fraud or Mistake) சேர்க்கப்பட்டிருந்தால் தான் முதல் பிரிவினையை ரத்துச் செய்ய முடியும். மோசடியோ, தவறோ, இல்லாமல் செய்யப்பட்ட பாகப் பிரிவினைகளை, ஒருவரும் வேறு காரணங்கள் இருந்தும் ரத்துச் செய்து கொள்ள முடியாது. பாகம் செய்து கொள்ளும் போது, சில பொதுச் சொத்துக்கள் எக்காரணத்தாலோ விட்டுப் போய், மற்றச் சொத்துக்களை மட்டில் பாகஸ்தர்கள் பாகம் செய்து கொண்டிருந்தால், விட்டுப் போன சொத்துக்கள் எப்பொழுதும் போல், பொதுச் சொத்தாகவே இருக்கும். அதைப் பின்பு எப்பொழுது வேண்டுமானாலும், பாகஸ்தர்கள் அவரவர்களுடைய வீதப்படி பாகம் செய்து கொள்ளலாம். இதற்காக முதலில் செய்த பிரிவினையை ரத்துச் செய்து கொள்ள அவசியமில்லை.

ஆனால் பாகஸ்தர்களுக்குச் சொந்தமல்லாத சொத்துக்களை, அவர்கள் பிரிவினை செய்து கொண்டு, அதவு", அவ்விதச் சொத்தைச் சமமாக எல்லோருடைய பாகத்திலும் வைத்துக் கொள்ளாமல், சிலருக்கு மட்டில் வைக்கப்பட்டு, அச்சொத்துக்களை உண்மையான சொந்தக்காரர் எடுத்துக்கொண்டு போகும் போதுதான் இந்தப் பிரச்னை ஏற்படுகிறது. அதாவது அச்சந்தர்ப்பத்தில் பாகஸ்தர்களில் ஒருவரோ சிலர் மட்டுமோதான் ஏமாந்து போகின்றனர். அச்சொத்துக்கள் தங்களுக்குச் சொந்தமான பொதுச் சொத்துக்கள் என்று இவர்கள் எண்ணியது தவறு. இத்தவறைச் செய்தது எல்லாப் பாகஸ்தர்களும் தான். ஆனால் கஷ்டம் ஏற்படுகிறது எல்லோருக்கும் அல்ல. இழந்த சொத்தைத் தம் பாகத்திற்கு வைத்துக் கொண்டவர்கள் மட்டில் கஷ்டம் அடைகிறார்கள். இவ்விதம் ஏற்படும நஷ்டத்தையும், எல்லோரும் சமபாகமாகப் பொறுத்துக் கொள்ள வேண்டியது தான் சட்டம், என்று நாகபுரி உயர் நீதிபதி அவர்கள் இவ்வழக்கில் அபிப்பிராயப்பட்டனர். அதாவது முன்பு ஏற்பட்ட பாகப் பிரிவினையை ரத்துச் செய்து, மறுபடியும் பாக்கி இருக்கும் சொத்துக்களைச் சமபாகம் செய்து கொள்ள உரிமை உண்டென்று நீதிபதி அவர்கள் அபிப்பிராயப் பட்டனர். நியாய முறைகளின்படி (Equitable principles) இவ்விதம் செய்யச் சட்டம் இடம் கொடுக்கிறதென்றும்; இதற்கு மாறாக இந்தச் சட்டங்களில் ஒன்று மில்லை என்றும் நீதிபதி அவர்கள் தீர்ப்பளித்தனர்.

"வக்கீல்" பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியிலேயே பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. தபால் மூலம் அனுப்பப்படும் பத்திரிகை 5-தேதிக்குள் உங்களிடம் கிடைக்காவிட்டால், உடனே "வக்கீல்" காரியாலயத்திற்கு ஒரு கார்டு எழுதவும். சந்தா நம்பரையும் விலாசத்தையும் புரியும்படி எழுதவும்.

ஏஜண்டுகள் மூலம் "வக்கீல்" வாங்கிவரும் இந்தியாவிலிருக்கும் நேயர்களுக்கும் 5-தேதிக்குள் "வக்கீல்" கிடைக்காவிட்டால் ஆபீசுக்கு எழுதி தருவித்துக் கொள்ளலாம்.

"விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம்" என்ற புத்தகம் இம்மாதத்தில் பிரசுரம் செய்யப்படும். "வக்கீல்" விசேஷ வருட சந்தாதாரர்களுக்கு இம்மாதத்திலேயே இப்புத்தகம் தபால் மூலம் அனுப்பப்படும்.

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில்தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் **அபிப்பிராயமே.**

44. கேள்வி: (உமாமகேசுவரன்—ஒரத்தநாடு) ஒரு கடையில் இருக்கும் எல்லாச் சிப்பந்திகளும் "எங்கள் அபிப்பிராயத்திற்கு வேலை செய்வோம், ஷாப் சட்டம் தேவை இல்லை" என்று ஷாப் இன்ஸ்பெக்டரிடம் தெரிவித்து அதன்படி செய்ய முடியுமா?

பதில்: முடியாது. ஷாப் சட்டத்திற்கு மாறாக ஒரு சிப்பந்தியை வேலை செய்யச் சொல்லவும் கூடாது; அனுமதிக்கவும் கூடாது.

45. கேள்வி: (சாம்பசிவய்யர் —குற்றாலம்.) ஒரு வியாபாரி ரூ. 6 கட்டி ரிஜிஸ்டர் செய்து கொண்ட பிறகு அவருடைய மொத்த வியாபாரத் தொகை அந்த வருடத்தில் ரூ. 10,000 ஆகும்போது எ. சி. டி. ஓ. வுக்குத் தெரிவிக்க வேண்டுமா? தெரிவிக்காமல் இருப்பது குற்றமாகுமா?

பதில்: என்றைய தினம் அவ்வியாபாரியின் அவ்வருடத்திய மொத்த வியாபாரம் ரூபாய் 10,000த்தைத் தொடுகின்றதோ, அத்தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் எ. சி. டி. ஓ. வுக்கு நமூனு AIபடி அவ்வியாபாரி ஒரு ரிடர்ன் அனுப்ப வேண்டும். விற்பனை வரிச் சட்டப்படி எந்த ரிடர்ன் அனுப்பாமலிருப்பதும் குற்றம் தான். வேண்டுமென்று செய்யப்படாத சிறிய தவறுகளைப்பற்றி அதிகாரிகள் வழக்குத் தொடர மாட்டார்கள். அவர்கள் வியாபாரியுடன் ராஜி செய்து கொள்ள முயற்சி செய்வார்கள். அதாவது, அக் குற்றத்தைப் பற்றி 'கம்பவுண்ட்' செய்து கொள்ளும்படி கேட்பார்கள். இதற்கு ஒரு கட்டணம் கேட்பார்கள். இதைக் கட்டிவிட்டால் கிரிமினல் வழக்கு இல்லாமல் போய்விடும்.

46. கேள்வி: (பெருமாள் கவுண்டர்—மன்னார்கோட்டை.) தற்போது நடக்கும் தேர்தலில் 'கம்யூனிஸ்டு'க்கு வோட்டுப் போட்டால், தேர்தலுக்குப் பின்பு காங்கிரஸ் வெற்றி பெற்றால், போலீசாரால் கைது செய்யப்பட்டு மிகவும் அவஸ்தைக்குள்ளாக வேண்டும் என்று சிலர் எண்ணுகிறார்கள். அதன்படி அடக்கு முறைச் சட்டம் வருமா? அல்லது ஜனநாயகம் தானா?

பதில்: (இது சட்ட சம்பந்தமான கேள்வி அல்ல. அரசியல் சம்பந்தமானது. தேர்தலுக்கு முன்பு கேட்கப்பட்டது. ஏதோ ஒரு சட்டம் வருமா, என்று கேட்டிருப்பதால் இக்கேள்வி இங்கே சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறது.) முதலாக, 'வோட்' போடுவது ரகசிய முறையில் இருப்பதால் யார் யாருக்கு 'வோட்' போட்டார்கள் என்று சொல்லமுடியாது. இரண்டாவதாக, வேறு எதை அடக்கச் சட்டங்கள் வந்தாலும் 'வோட்' போடுவதை அடக்கவோ, 'வோட்' போட்டவர்களை அடக்கவோ எந்த ஜனநாயக ஆட்சியிலும் சட்டங்கள் வரா. மூன்றாவதாக, இந்த ராஜ்யத்தில் காங்கிரசும் மற்ற கட்சிகளை அடக்கும் விதம் ஜயிக்கவில்லையாகையால், கேள்வி கேட்ட நண்பர் ஒன்றுக்கும் பயப்பட வேண்டியதில்லை.

47. கேள்வி: (குருநாத பிள்ளை — மணச்சநல்லூர்.) ஒரு பிரிவினையாகாத (இந்து) குடும்பத்தில், தகப்பனுருடைய அனுமதியில்லாமல், அவருடைய புதல்வர்கள் மூவரும் சேர்ந்து,

தகப்பனாரின் மூதாதையர்கள் சம்பாதித்த சொத்தை, ஈடாக வைத்துக் கடன் வாங்கினால் அது செல்லுமா?

பதில்: செல்லும்; ஆனால் அச்சொத்தில் ஈடு வைப்பவர்களின் வீதம் எவ்வளவோ அவ்வளவுதான் கட்டுப்படும். இருந்தாலும் இப்புதல்வர்களில் ஒருவரோ, பொதுக் குடும்ப 'மானேஜரா'கவும் இருந்து, குடும்ப அவசியத்திற்காகவும் அக்கடன் வாங்கப்பட்டால், அது தகப்பனாருடைய பாகம் உள்பட எல்லோருடைய பாகத்தையும் கூடக் கட்டுப்படுத்தும்.

48. கேள்வி: (லக்ஷ்மணன் — திருவானைக்காவல்.) யாதொரு தஸ்தவேஜுமில்லாமல் கைமாற்றுக் கொடுக்கும் கடன்களை வசூல் செய்யத்தாவா போட காலாவதி கெடு எவ்வளவு?

பதில்: கைமாற்றுக் கடன் கொடுத்த தேதியிலிருந்து 3 வருடம்.

49. கேள்வி: (லக்ஷ்மணன் செட்டி—கோபி) நகைகளின் பேரில் கடன் கொடுத்து பாங்குத் தொழில் நடத்த ரிசர்வ் பாங்கியிலோ, சர்க்காரிடமோ அனுமதி வாங்கிக் கொள்ள வேண்டுமா? 10 நபர்கள் சேர்ந்து கூட்டாக இத்தொழிலை நடத்தலாமா?

பதில்: "ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுப்பவர்கள் சட்டம்" என்ற 1943-ஆம் வருடத்திய சென்னை பான் புரோக்கர் ஆக்ட் (The Madras Pawn Brokers Act—1943) படி இதற்காக லைசென்சு வாங்கிக்கொண்டுதான் இத்தொழில் நடத்த வேண்டும். சென்னையில் கலெக்டருக்கும், மற்ற இடங்களில் ரிவென்யூ டிவிஷனல் ஆபீசர்களுக்கும் லைசென்சு மனுப் போடவேண்டும். இதைத் தவிர வேறு ரிசர்வ் பாங்கிடம் அனுமதி பெற வேண்டிய இல்லை. 10 நபர்களுக்கு மேல் கூட்டாகச் சேரக் கூடாது. 10 நபர்களுக்கு மேல் சேர்ந்து 'பாங்கிங்' தொழில் நடத்த 'கம்பெனிச் சட்டப்படி' கம்பெனியாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

50. கேள்வி: (நல்லலகுநாடார் — கோயில்பட்டி.) தேர்தலில் நின்று ஒரு நபர் ஒரு தொகுதியில் டிபாசிட் இழந்து விட்டால் மறுபடி, பஞ்சாயத்து, முனிசிபாலிட்டி தேர்தலில் நிற்கச் சட்ட பூர்வமாகத் தடை ஏதவும் இருக்கிறதா?

பதில்: இல்லை.

51. கேள்வி: (பாட்சா ராவுத்தர் — மணப்பாறை) 'மைனர் வியாஜ்யம்' போடவேண்டியிருந்தால், மைனர் மேஜரானவுடன் போடவேண்டுமா? அல்லது எப்பொழுது வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளலாமா? மைனர் எத்தனை வயது பூர்த்தியானவுடன் 'மேஜர்' ஆகின்றார்?

பதில்: மைனர் மேஜரானவுடனும் போடலாம்; மைனராக இருக்கும்போதும் மைனருக்காக ஒரு 'அடுத்த சிநேகிதர்' (Next Friend) என்று சொல்லப்படும் எவரும் போடலாம். சாதாரணமாக, ஒருவருக்கு 18 வயது பூர்த்தியானவுடன் அவர் மேஜராகிறார். ஆனால் 'கார்டியன்ஸ் அண்டு வார்ட்ஸ்' சட்டப்படி ஜில்லா கோர்ட்டால் கார்டியன் நியமிக்கப்பட்டிருக்கும் மைனர்களும் 'கோர்ட் ஆப் வார்ட்'சின் போஷணையிலிருக்கும் மைனர்களும் 21 வயது பூர்த்தியான பின்புதான் 'மேஜர்' ஆவார்கள்.

52. கேள்வி: (முத்து நல்லப்பாரெட்டியார்-குரூர்) ஒரு இந்து, இறந்துவிட்டார். அவருக்கு இரண்டு மனைவிகள். பிள்ளை இல்லை. இரண்டு மனைவிகளுக்குப் பிறகு எல்லாச் சொத்துக்களுக்கும் இறந்த இந்துவின் சகோதரி மகன் தான் அனந்தர வார்சு என்று டிக்ரி ஏற்பட்டால் டை டிக்ரி பெற்றவரிடம், மனைவிகள் தங்கள் ஜீவதசைக்கு ரொக்கம் வாங்கிக்கொண்டு விடுதலை எழுதிக் கொடுத்தால், அந்த விடுதலை செல்லுமா?

பதில்: செல்லும். இதற்கு ஆங்கிலத்தில் 'ஸரண்டர்' (Surrender) என்று சொல்வது. ஆயுள்வரை சொத்துக்களை அனுபவிக்க உரிமையுள்ள இரண்டு மனைவிகளும் சேர்ந்து எல்லாச் சொத்துக்களையும், அப்பொழுது அவர்கள் இறந்து போனால் யார் அனந்தர வார்சாக வருவார்களோ அவர்கள் அனைவருக்கும் விட்டுக் கொடுத்து விடலாம். அப்படிச் செய்தால்தான் 'ஸரண்டர்' செல்லும். 'ஸரண்டர்' செய்யும் விதவைகளுக்கு ஆயுள்வரை ஜீவனாம்சத்திற்கு ஒரு உண்மையான ஏற்பாடு செய்து கொண்டால் பாதகமில்லை. ஆனால் 'ஸரண்டர்' செய்வது போல் வெளிப்பாவனை செய்து எழுதிக்கொண்டு உண்மையில் சொத்துக்களை ஆளுக்குக் கொஞ்சமாகப் பாகப்பிரிவினை செய்துகொண்டால் அந்த 'ஸரண்டர்' செல்லாது. அதாவது இரண்டு விதவைகளும் இறந்தவுடன் வேறு ஒருவர் அனந்தர வார்சாக இருந்தால், இந்த 'ஸரண்டர்' அவரைக் கட்டுப்படுத்தாது.

53. கேள்வி: (கணேசன்—குலமாணிக்கம்) ஒருவருக்குக் கலியாணமாகாத ஒரு ஆணும் கலியாணமாகாத ஒரு பெண்ணும் இருக்கிறார்கள். ஆண்மகனுக்கு இளமையிலிருந்து புத்தி

சுவாதீனமில்லை. தகப்பன் இறந்த பிறகு, புத்தி சுவாதீன மில்லாத ஆண், சொத்தை விநியோகம் செய்தால், செல்லுமா? பெண் வார்சும் தாயாரும் அந்த விநியோகத்தை ரத்துச்செய்யலாமா?

பதில்: பிறவி முதலே புத்தி சுவாதீன மில்லாத ஒரு இந்துவுக்கு வார்சு பாத்தியமே கிடையாது. ஆகையால் அவர் செய்யும் விநியோகம் செல்லாது. பிறக்கும் போது சரியாக இருந்து, பிறகு புத்தி சுவாதீனம் இல்லாமல் போனால், அம்மகனுக்கு வார்சு பாத்தியம் உண்டு. ஆனால், வார்சு முறைமையில் தாம் அடைந்த சொத்துக்களை அவரே பராதீனம் செய்தால் செல்லாது. புத்தி சுவாதீன மில்லாதவர் செய்த பராதீனங்கள் செல்லாதெனக் கோர்ட் மூலம் தீர்மானம் செய்வதற்காகத் தாயாரோ பெண்ணோ நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம். பெண் 'வார்சு' அல்ல.

54. கேள்வி: (ஷை) ஒரு இந்து இறந்துவிட்டார். அவருக்குச் சுவீகார மகன் என்று பாத்தியம் கொண்டாடி ஒருவரால் இறந்தவருடைய மனைவியின் மீது தாவா செய்யப்பட்டிருக்கும் போது, மூல புருடனால் ஏற்பட்ட கடன்களுக்காக மனைவி மீது மட்டில் வாங்கப்பட்ட டிக்ரிக் கடன்களை தீர்க்க, மூல புருடனின் சொத்துக்களை, மனைவி விற்றால் செல்லுமா?

பதில்: சுவீகாரம் சம்பந்தமான தாவாவில் ஏற்படும் தீர்ப்புக்கு விரோதமாக, மனைவியின் கிரயசாசனம் செல்லாது. அதாவது, அத்தாவாவில் சுவீகார மகனுக்கு ஏதாவது பாத்தியம் சித்தித்தால் அப்பாத்தியமானது, மனைவி செய்த கிரயசாசனத்தால் பாதிக்கப்பட மாட்டாது. கோர்ட்டில், ஒரு சொத்து விஷயமாய் இரு நபர்களுக்கிடையே நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கும்போது, அதில் கட்சிக்காரராக இருக்கும் ஒருவர் தம்முடைய பாத்தியத்தை யாருக்கு எவ்விதமான பராதீனம் செய்தாலும், அவ்விதமான பராதீனங்களைப் பெறுபவர்களையும் அத்தாவாவில் ஏற்படும் தீர்ப்பானது கட்டுப்படுத்தும் என்று ஒரு விதி இருக்கிறது. இதற்கு 'லிஸ்பெண்டன்ஸ்' விதி (Lispendens) என்று ஆங்கிலத்தில் சொல்வது.

55. கேள்வி: (ஜானகிராம் — லட்சுமாயகம் பேட்டை.) 1949 டிசம்பரில் ஒரு ரைஸ் மில்லுக்கு லைசென்சு கிடைத்தும், அக்கட்டடத்திற்கு 'டாப்' போட 'லிங்க்' ஷீட் தகரங்களுக்கு டைரெக்டர் ஆப் கண்ட்ரோல்டு கமாடிடீஸ் (Director of Controlled Commodities)க்கு எழுதியும் கிடைக்காவிட்டால், யாருக்கு மனுப் போடவேண்டும்?

பதில்: ஒரு 'கண்ட்ரோல்' சாமானைப் பற்றிய சட்டம், அல்லது, விதிகள் என்ன என்று கேட்டால் தான் "வக்கீல்" பத்திரிகையில் பதில் சொல்வது சாத்தியமாகும். ஒரு 'கண்ட்ரோல்' சரக்கை எப்படி அடைவது என்பது உங்கள் சொந்த விஷயம். சட்டப்படி மனுச் செய்த தங்களுக்கு ஏன் அச்சரக்குக் கிடைக்கவில்லை என்பதற்கு, "வக்கீல்" எப்படிப் பதில் சொல்ல முடியும்? இவ்விதம் பல கேள்விகள் இருப்பதால் உதாரணமாகவே இக்கேள்வி, இப்பகுதியில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. தாங்கள் சரியான அதிகாரிக்குத் தான் மனு செய்திருக்கின்றீர்கள். ஆனால் பொது மக்களால் போடப்படும் மனுக்கள் சட்டபூர்வமாக இல்லாவிட்டால், அவைகளில் என்ன தவறு இருக்கிறது, இன்னும் என்ன செய்ய வேண்டும் அல்லது வேறு யாருக்கு மனுப்போட வேண்டும் என்று, மக்களுக்கு உதவி செய்யும் முறையில் நடந்து கொள்ளும்படி இன்னும் இந்திய நிர்வாக இலாகாகளுக்குப் பயிற்சி அளிக்கப்படவில்லை. "மனு சரியாக இல்லை" என்று மட்டில் சில மாதங்கள் அல்லது வருடங்களுக்குப்பின் பதில் வரலாம். அல்லது பதிலே எழுதாவிட்டாலும் விடலாம். ஆகையால் தங்களுக்கு 'லிங்க்' ஷீட் தகரங்களைப்பற்றிய கண்ட்ரோல் விதிகளும் நமூனக்களும் தெரிய வேண்டுமானால் "வக்கீலு"க்கு மறுபடியும் எழுதவும். ஆனால் தங்களுக்கு "லிங்க்" ஷீட்டுகளே, கண்ட்ரோல் விலைக்கு வேண்டுமானால், அத்தகரங்களை அதிகமான கஷ்டமில்லாமல் நினைத்தவுடன் அடைந்து வரும் ஆசாமிகளைக் கேட்டுக் கொள்ளவும். ஆனால் அவர்கள் உங்களுக்கு அந்த ரகசியங்களைச் சொல்லுவார்களா?

56. கேள்வி: (அந்தியப்ப கவுண்டர்— கல்க்குரிச்சி.) ஒரு இனும் பூமியை 50 வருடங்களாய் ஒரே நபர் குத்தகைக்கு உழுது வந்தால் அந்த நிலம் யாரைச் சேரும்?

பதில்: 'இனும்' பூமி என்பது 'எஸ்டேட் லாண்டு ஆக்ட்' என்ற சட்டப்படி ஒரு 'எஸ்டேட்'டில் இருக்கும் பூமியா என்றும்; குத்தகைக்கு ஒப்புக்கொண்டு உழுது வருபவர், இனும்தாரிடம் பூமியை ஒப்புக்கொண்டாரா, அல்லது குடிவாரரயத்திடம் குத்தகைக்கு ஒப்புக்கொண்டாரா, என்றும் தெரிந்தால்தான் இக்கேள்விக்குப் பதில் சொல்ல முடியும்.

57. கேள்வி: (நூர் முகமது—குலசேகர பட்டணம்.) சிலோன் வியாபாரத்தில் செல்ல வேண்டிய 'அண்டிமாண்டு' தொகைக்கு இந்தியாவில் அதை ஒருவருக்கு 'மேடோவர்' கொடுத்து அதை இந்தியக் கோர்ட்டிலேயே தாவாசெய்து வசூல் செய்யச் சட்டம் உண்டா?

பதில்: செய்யலாம்.

58. கேள்வி: (K. V. ராமன்—பங்களூர்.) ஒருவர் தம்முடைய நிலத்தை அனுபோக ஒத்திக்கு 1929ல் ஒரு பெண்வசம் வைத்திருந்தார். அதே நிலத்தை அந்தப்பெண் மற்றொரு ஆண் நபர் வசம் 1942 இல் மறு ஒத்திக்கு வைத்திருக்கிறார். தற்சமயம் நிலத்தின் சொந்தக்காரர் நிலத்தை மீட்க விரும்பினால் புதுச் சட்டப்படி தள்ளுபடி உண்டா?

பதில்: 1-10-1937ல், ஒத்தித்தொகை உள்பட அப்பெண்ணுக்கு மொத்த ஐவேஜி ரூபாய் 6000க்கு மேற்படாமல் இருந்தால், இந்த ஒத்தியை மீட்க ஜாடாத் தொகையையும் கட்டவேண்டும். அப்படி இல்லாவிட்டால், அசல் தொகையில் மறு ஒத்தித்தொகை எவ்வளவோ அதுவும், பாக்கித்தொகையில் ஒத்தித் தேதியிலிருந்து வருடம் 1க்கு 30ல் 1பங்கு வீதம் கழித்துக்கொண்டு பாக்கித் தொகையையும் கட்டி ஒத்தியை மீட்கலாம்.

59. கேள்வி: (வெங்கடராவ்—விழுப்புரம்) ஒரு கம்பெனியில் (Joint Stock Company) டைரெக்டர் அல்லது 'ஜெனரல்பாடி' மீட்டிங் நடந்தால், ஆஜர் மெம்பர்களின் கையெழுத்தை 'மினிட்ஸ்' புத்தகத்தில் வாங்குவது அவசியமா? அப்படிக் கையெழுத்திடாத மீட்டிங்கில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் சட்டப்படி செல்லுபடியாகுமா?

பதில்: ஆஜர் மெம்பர்களின் கையெழுத்து, 'மினிட்ஸ்' புத்தகத்தில் வாங்கவேண்டியது சட்டப்படி அவசியமில்லை. மீட்டிங்கில் தலைமை வகிக்கும் 'சேர்மன்' கையெழுத்து மட்டில் அவசியம். அது இருந்தால் அம் 'மினிட்ஸ்' சட்டபூர்வமானதே.

60. கேள்வி: (K. நயினாமுகமது — கரூர்) 1951 ஜனவரிமாத "வக்கீல்" இதழில் பக்கம் 16 இல் 'சென்னை உணவு தானியக் கொள் முதல் உத்தரவு 1947—திருத்தம்' என்ற தலைப்பில், பிரயாணிகள் கையுடன் 'ஒரு வார ரேஷன்' உணவுத் தானியத்தை எடுத்துச் செல்லலாம் என்று இருக்கிறது. ரேஷன் இல்லாத இடங்களிலிருந்து ரேஷன் இருக்கும் இடங்களுக்கு இப்படிக்கொண்டு போகலாமா?

பதில்: சென்னை உணவுத் தானியக் கொள் முதல் உத்தரவு 1947 (Madras Food Grains Procurement Order 1947) என்ற கண்ட்ரோல் உத்தரவு இப்பொழுது மலையாளம் ஜில்லாவில் மட்டில்தான் அமுலில் இருக்கிறது. இவ்வுத்தரவின் 5ஆவது ஷரத்துப்படி 'கிரெயின் பர்சேஸ் ஆபீசரு'டைய அனுமதியின்றி எவரும் உணவு தானியத்தைக் கிராமத்திலிருந்து அல்லது கிடங்கிலிருந்து எடுத்துச் செல்லக் கூடாதென்று இருக்கிறது. அத்துடன் ஒரு ஷரத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது, பிரயாணிகள் கையுடன் ஒரு வாரத்திய ரேஷன் அளவு தானியத்தை எடுத்துப்போக அனுமதி வேண்டியதில்லை என்று சேர்க்கப் பட்டிருக்கிறது. இது மலையாள ஜில்லாவிலிருந்து பிரயாணம் செய்யும் பிரயாணிகளுக்குத் தான் பொருந்தும்.

61. கேள்வி: (முகமது இப்ராகிம்—கூனூர்) ஒருவருக்கு (ஸ்தாவர) சொத்துப் பாகம் கிடைக்க வேண்டியதை, அவர் வேறு ஒருவருக்கு விற்று விட்டார். கிரயம் பெற்றவர், சொத்தை வைத்திருப்பவர் மீது தாவா செய்து பாகம் பிரித்துக் கொள்ள வேண்டுமானால் கிரயப்பத்திரத் தேதியிலிருந்து எத்தனை காலத்திற்குள் தாவா போடவேண்டும்?

பதில்: கிரயம் செய்தவருடைய பாத்தியமோ கிரயம் பெற்றவருடைய பாத்தியமோ மறுக்கப் பட்ட தேதியிலிருந்து 12 வருடங்களுக்குள் தாவா செய்யலாம்.

62. கேள்வி: (பழனிசாமி—சின்னமுத்தூர்) மைனர் பஞ்சாயத்து எல்லைக் குட்பட்ட ஊரில் வசிக்கும் ஒருவர் தம் பண்ணை வேலைக்கு மாதந்தோறும் சம்பளம் கொடுப்பதாக ஒரு வருடத்திற்கு வாய் ஒப்பந்தம் செய்து, குடியிருக்க வீடும் கொடுத்து அரை வருடத்திற்குப் பின் அந்தப் பண்ணையாளை வேலையை விட்டு நீக்கினால், பாதிக்கப்பட்ட நபர் நஷ்ட ஈடு கேட்கலாமா?

பதில்: சட்டபூர்வமான எந்த ஒப்பந்தம் மீறப்பட்டாலும், அதனால் பாதிக்கப் பட்டவர் நஷ்ட ஈடு கேட்கலாம். வாய் மொழி ஒப்பந்தங்களில் தகராறுகள் ஏற்பட்டால் அவ்விதம் ஒரு ஒப்பந்தமே ஏற்பட்டதா; அப்படியானால் அந்த ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் என்ன என்பதை ருசுப்பிப்பது தான் சுலபமல்ல,

சென்னை கிராம பஞ்சாயத்துச் சட்டம் (1950)

[The Madras Village Panchayats Act—1950. 1950-ஆம் வருடத்திய 10-ஆவது சென்னைச் சட்டம். சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப் பட்டது. 15—7—1950 ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 1—8—1950 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டது. 1—4—1951 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. பஞ்சாயத்துச் சட்டம், அது சம்பந்தமான விதிகள், சர்க்கார் அறிக்கைகள் முதலியவைகள் எல்லாவற்றையும் சேர்த்து 1952 பிப்ரவரி மாத "வக்கீல்" இதழ் முதல் தொடர்ச்சியாகவும் விவரமாகவும் விளக்கம் செய்யப்பட்டு வருகிறது.]

தலைவரும் உபதலைவரும் சில சந்தர்ப்பங்களில் பதவி இழப்பார்கள்.

செக்ஷன் 33

ஒரு பஞ்சாயத்தின் தலைவரோ உபதலைவரோ ஜில்லா போர்டின் தலைவராகவோ, உபதலைவராகவோ தேர்ந்தெடுக்கப் பட்டாலும் அல்லது வேறு ஒரு பஞ்சாயத்தின் தலைவராகவோ உபதலைவராகவோ தேர்ந்தெடுக்கப்பட்டாலும், தம் பதவிகளை இழப்பார்கள். அதாவது, ஏற்கனவே ஒரு பஞ்சாயத்தின் தலைவராக இருப்பவர் அப் பதவியையும், உபதலைவராக இருப்பவர் அப் பதவியையும் இழப்பார்கள்.

பஞ்சாயத்துத் தலைவருக்கு முன் சொல்லப் பட்ட யோக்கியதாம்சக் குறைவுகள் ஏற்பட்டாலும், பதவியிலிருந்து அவர் நீக்கப்பட்டாலும், பதவியின் கெடு முடிந்தாலும், அவர் தம் தலைவர் பதவியை இழப்பார்.

உபதலைவர்கள், தங்களுடைய மெம்பர் ஸ்தானத்தின் கெடு முடிந்தாலும், மெம்பர் ஸ்தானமே யோக்கியதாம்சக் குறைவுகளால் போய்விட்டாலும், அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், உபதலைவர் ஸ்தானத்தை இழப்பார்.

தலைவரின் பொறுப்பும் உரிமையும்.

செக்ஷன் 24

பஞ்சாயத்துத் தலைவர் (1) உபதலைவரின் தேர்தலுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். (2) பஞ்சாயத்து கூட்டங்களைக் கூட்ட வேண்டும். (3) பஞ்சாயத்தின் எல்லா 'ரிகார்டு'களையும் பார்க்கத் தலைவருக்கு உரிமை உண்டு. (4) இச் சட்டப்படி தலைவர் செய்ய வேண்டியதாக உள்ள எல்லாக் கடமைகளையும் செய்ய வேண்டும்.

தலைவர் இல்லாவிட்டால் அவருடைய அலுவல்களை யார் செய்வது?

செக்ஷன் 25

ஒரு பஞ்சாயத்தின் தலைவர் ஸ்தானம் காலியாக இருக்கும்போது, வேறு தலைவர் தேர்ந்தெடுக்கப் பட்டு, அவர் உத்தியோகத்தை ஏற்றுக் கொள்ளும் வரை, அப்பஞ்சாயத்தின் உபதலைவர்தான் தலைவருடைய அலுவல்களைச் செய்ய வேண்டும்.

தலைவர் பஞ்சாயத்து எல்லையை விட்டுத் தொடர்ச்சியாக 15 நாட்களுக்கு மேல் வெளியே போய் விட்டாலும், அல்லது தம் வேலைகளைக் கவனிக்க முடியாதபடி சக்தியற்றவராக ஆனாலும் அப்பொழுதும் அவர் வேலைகளை விதிகளுக் குட்பட்டு உபதலைவர்தான் செய்ய வேண்டும். ஆனால் பஞ்சாயத்துத் தலைவர் பஞ்சாயத்தின் காரியமாகவே சென்னை ராஜ்யத்துக்குள் ஒரு இடத்திற்குப் போயிருந்தால் அவருடைய வேலைகளை உபதலைவர் செய்ய முடியாது என்று விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

தலைவருடைய ஸ்தானம் காலியாக இருக்கும் போதோ அல்லது தலைவர் தொடர்ந்த 15 நாட்களுக்கு மேல் பஞ்சாயத்து எல்லைக்கு வெளி போய் விட்ட காலத்திலோ, தலைவர் தம் வேலையைக் கவனிக்கச் சக்தியற்றவராக இருக்கும் அதே காலத்தில் உபதலைவருடைய ஸ்தானம் காலியாக இருந்தாலும் சரி, உபதலைவர் 15 நாட்களுக்கு மேல் பஞ்சாயத்து எல்லைக்கு வெளியே போய் விட்டாலும் சரி, அல்லது

உபதலைவரும் சக்தியற்றவராக இருந்தாலும் சரி, அப்பொழுது இதற்காக இன்ஸ்பெக்டரால் நியமிக்கப்படும் ஒரு பஞ்சாயத்து மெம்பர்தான் தலைவருடைய வேலைகளைச் செய்ய வேண்டும். இவ்விதம் நியமிக்கப்படும் தாற்காலிகத் தலைவரானவர் (Temporary President) அப்பஞ்சாயத்தின் தலைவர் அல்லது உபதலைவர் வந்து வேலை ஒப்புக் கொள்ளும்வரைதான் தலைவர் வேலைகளைச் செய்ய உரிமை உள்ளவர்களாவார். இவ்விதமான தாற்காலிக தலைவர்கள், தனி நிர்வாக உத்தியோகஸ்தர் இல்லாத பஞ்சாயத்துக்களில், அப்பஞ்சாயத்தின் ஊழியர் அல்லது சிப்பந்திகளின் நியமனம், வேலை உயர்வு, தண்டனை சம்பந்தமாக எவ்வித அதிகாரத்தையும் செலுத்த முடியாது. தலைவர் ஸ்தானம் காலியாக இருக்கும் விஷயத்தை 3 நாட்களுக்குள் அப்பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி தேர்தல் அதிகாரிக்கு (Election Authority) அறிவிக்க வேண்டும். நிர்வாக அதிகாரி இல்லாவிட்டால் உபதலைவரும், உபதலைவருடைய ஸ்தானம் காலியாக இருந்தாலும் அல்லது உபதலைவர் தொடர்ந்த 15 நாட்களுக்கு மேல் வெளியூர் போய் விட்டாலும், அப்பஞ்சாயத்து ஆபீஸ் இருக்கும் ரிவன்யூ கிராம பெரியதனக்காரர் (Headman of the Revenue Village) இவ்விஷயத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டவர்.

விதிகளால் ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு, பஞ்சாயத்துத் தலைவரே தம் வேலைகள் எதையும் உபதலைவர் செய்யும்படியோ, உபதலைவர் இல்லாவிட்டால், வேறு ஒரு மெம்பர் செய்யும்படியோ தம் அதிகாரங்கள் எதையும் எழுத்து மூலம் அவருக்கு மாற்றிக் (delegate) கொடுக்கலாம். இது சம்பந்தமாகவும் 27—3—1951-ல் அறிக்கை 7 மூலம் சர்க்கார் சில விதிகள் ஏற்படுத்தியிருக்கின்றனர். அதாவது, தலைவர் தம் வேலைகளை உபதலைவருக்கோ, வேறு ஒரு மெம்பருக்கோ மாற்றக் கூடாதென்று பஞ்சாயத்தே தடை செய்திருந்தால் அவர் மேற்கண்டபடி மாற்ற முடியாது. தலைவருடைய வேலைகள் உபதலைவரல்லாத வேறு ஒரு மெம்பருக்கு மாற்றப்பட்டால் அவருக்குப் பதிலித் தலைவர் (President Deligate) என்று பெயர். தலைவர் தம்முடைய பொறுப்புக்களில் சிலவற்றை உப தலைவர் அல்லாத வேறு ஒரு மெம்பருக்கு மாற்றி விட்டால், மறுபடியும் அந்தப் பொறுப்புக்களை அதே மெம்பருக்கு மாற்றலாமே ஒழிய, வேறு ஒரு மெம்பருக்கு மாற்ற முடியாது. பஞ்சாயத்தின் அனுமதியின்றித் தலைவர் ஒரு வருடத்தில் 90 நாட்களுக்கு மேற்பட்ட காலத்திற்குத் தம் அலுவல்களை உபதலைவரல்லாத வேறு ஒரு மெம்பருக்கு மாற்ற முடியாது. அதாவது, ஒரு வருடத்தில் மொத்தம் 90 நாட்கள் வரைதான் தலைவர் தம் அலுவல்களை வேறு ஒருவருக்கு மாற்றலாம். தலைவர் மேற்கண்டபடி தம் அலுவல்களை உபதலைவர் அல்லாத வேறு ஒரு மெம்பருக்கு மாற்றினால் அது விஷயம் அப்பஞ்சாயதின் அடுத்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட வேண்டும். தவிர ஜில்லா பஞ்சாயத்து ஆபீசருக்கும் இவ்விஷயத்தைத் தெரிவிக்க வேண்டும்.

மேற்கண்டபடி தலைவர் தம் அலுவல்களை உபதலைவருக்கு மாற்றினாலும், வேறு ஒரு மெம்பருககு மாற்றினாலும், அவர்கள் செய்யும் காரியங்களை மேற்பார்வை பார்க்கவும், திருத்தவும் தலைவருக்கு எப்பொழுதும் அதிகாரம் உண்டு.

மெம்பர்கள்

பஞ்சாயத்து மெம்பரின் உரிமைகள் :

(1) பஞ்சாயத்தின் வேலைகளைச் செய்வதில் ஏற்படும் ஊழல்களையும், பஞ்சாயத்தின் சொத்துக்கள் வீணாக்கப்படுவது பற்றியும், பஞ்சாயத்தின் எந்தப் பாகத்திற்காவது செய்யப்பட வேண்டிய வேலைகளைப் பற்றியும் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரிக்கு எடுத்துக் காட்டவும், அவருக்கு யுக்தமாகத் தோன்றும் அபிவிருத்திகளைச் செய்யும்படி சொல்லவும் ஒவ்வொரு பஞ்சாயத்து மெம்பருக்கும் உரிமை உண்டு.

செக்ஷன் 26

(2) விதிகளை அனுசரித்து, பஞ்சாயத்துக் கூட்டங்களில் தீர்மானங்கள் கொண்டுவரவும், பஞ்சாயத்தின் நிர்வாகத்தைப் பற்றித் தலைவரைக் கேள்விகள் கேட்கவும் ஒவ்வொரு மெம்பருக்கும் உரிமை உண்டு. (3) பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரிக்கு முன் கூட்டியே தெரிவித்து விட்டுப் பஞ்சாயத்தின் 'ரிகார்டுகளை' (அதாவது, தஸ்தவேஜிகள், கணக்குகள், கடிதப் போக்கு வரத்து முதலிய எவைகளையும்) ஆபீஸ் நேரங்களில் பார்க்க எந்த மெம்பருக்கும் உரிமை உண்டு. ஆனல் தகுந்த காரணங்கள் இருந்தால் அவைகளை எழுத்து மூலம் எழுதி எந்த மெம்பரும் அவ்விதம் ரிகார்டுகளைப் பார்வையிடுவதைத் தடுக்கப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிக்கு உரிமை உண்டு.

கேள்வி கேட்பதைப் பற்றிய விதிகள்.

பஞ்சாயத்தின் தலைவரைப் பஞ்சாயத்தின் நிர்வாகத்தைப் பற்றிய கேள்விகள் கேட்க எந்த மெம்பருக்கும் உரிமை உண்டு என்பதைக் கவனித்தோம். இது சம்பந்தமாக 27-3-1951ல் ஏற்பட்ட அறிக்கை 8-ன் மூலம் சர்க்காரால் கீழே கண்டபடி விதிகள் செய்யப் பட்டிருக்கின்றன. அவைகளாவன:—(1) கேள்விகள் அப்பஞ்சாயத்தின் விஷயங்களைப் பற்றித் தான் இருக்க வேண்டுமே ஒழிய வேறு விஷயங்களைப் பற்றி இருக்கக்கூடாது. (2) கேள்வி கேட்க விருப்பமுள்ளவர்கள் குறைந்தது 10 நாட்கள் முன்பே தலைவருக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டும். கேள்விகள் என்ன என்பதையும் அதில் எழுத வேண்டும். (3) கேள்விகளில் அவசியமில்லாமல் ஒருவருடைய பெயரோ விஷயமோ இருக்கக் கூடாது; கேள்வி கேட்பவர் ஒரு விஷயத்தை உண்மை போல் வைத்துக்கொண்டு அதைப் பற்றி ஏதாவது கேள்விகள் கேட்டால், அவ் விஷயம் உண்மை என்பதற்கு கேள்விக் கேட்கும் மெம்பரே ஜவாப்தாரி ஆவார்; கேள்விகளில் வாதபிரதிவாதங்களும், ஊகங்களும், பரிகசிக்கும் பாவனையும் அபவாத வார்த்தைகளும் இருக்கக் கூடாது; அபிப்பிராயங்களையும் சட்டப் பிரச்னைகளைப் பற்றிய சந்தேகங்களையும் நடக்காத விஷயங்கள் நடந்தது போல் வைத்து அவை பற்றியும் கேள்விகள் கேட்கக் கூடாது; ஒருவரைப்பற்றி உத்தியோக தோரணை இல்லாமல் அவருடைய சொந்த நடத்தை பற்றியோ அவருடைய சுபாவத்தைப் பற்றியோ கேள்விகள் கேட்கக் கூடாது; கேள்விகள் சுருக்கமாக இருக்க வேண்டும்; அதிக நீளமாக இருக்கக் கூடாது; ஒரு தடவை பூராவும் பதில் சொல்லப்பட்ட கேள்வியை மறுபடியும் கேட்கக் கூடாது.

ஒரு கேள்வியை ஏற்றுக் கொண்டு அதற்குப் பதில் சொல்ல வேண்மோ, வேண்டாமா, என்பதைப் பஞ்சாயத்துத் தலைவர் தான் கூட்டம் நடக்க இருக்கும் தேதிக்கு முன்பே முடிவு செய்யவேண்டும். விதிகளுக்கு மாறாக இருக்கும் கேள்விகளையும்; கேள்விகள் கேட்கலாம் என்ற உரிமையை ஒரு மெம்பர் கெடுதலாகப் பயன் படுத்திக் கொள்கிறார் என்று தலைவருக்குத் தோன்றினாலும்; அக்கேள்விகளுக்குப் பதிலளிப்பது பொது நலத்திற்கு விரோதமாகும் என்ற தலைவருக்குத் தோன்றினாலும் அவர் அக்கேள்விகளை ஏற்றுக்கொள்ள மறுக்கலாம். ஆனால் அக்கேள்விகளை அவர் பஞ்சாயத்து நடவடிக்கைப் புத்தகத்தில் பதிந்து கொள்ள வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகள் பஞ்சாயத்துக் கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்பில் (அஜெண்டாவில்=Agenda) காணப்பட்டிருக்கும். ஒரு கூட்டத்தின் மற்ற நடவடிக்கைகள் ஆரம்பமாகும் முன்பே இக்கேள்விகளுக்கு, வரிசைக் கிரமமாய், தலைவர் பதிலளிப்பார். ஆனால் கேள்வி கேட்ட மெம்பர் அக்கேள்வியை வாபஸ் வாங்கிக் கொள்ளலாம். வாபஸ் வாங்கிக் கொண்ட கேள்விகளுக்குச் சாதாரணமாய்த் தலைவர் பதில் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் வாபஸ் வாங்கப்பட்ட ஒரு கேள்விக்கும் பதில் சொல்ல வேண்டியது பொது நன்மைக்கு உகந்ததென்று தலைவருக்குத் தோன்றினால், அதற்கும் பதில் அளிக்கத் தலைவருக்கு உரிமை உண்டு. ஒரு கேள்விக்குப் பதில் சொல்லப் பட்டவுடன் அப்பதிலில் கண்ட விஷயங்களைத் தெளிவு படுத்திக் கொள்ள எந்த மெம்பரும் உபரிக் கேள்விகள் (Supplementary) கேட்கலாம். ஆனால் இவ்வித உபரிக் கேள்விகளும் விதிகளுக்கு மாறாக இருந்தால் அவைகளை ஏற்றுக் கொள்ளத் தலைவர் மறுக்கலாம். மேலும் இவ்வித உபரிக் கேள்விகளைப்பற்றி முன் அறிவிப்பு (Notice) வேண்டுமென்று தலைவர் சொல்லலாம். அப்படியானால் அவ்வித உபரிக் கேள்விகளை அடுத்த மீட்டிங்கில் பதில் சொல்லும்படி ஒரு சாதாரண கேள்வியாகத்தான் கேட்க வேண்டும்.

இவ்விதிகளின்படி கேட்கப்பட்ட கேள்விகளைப் பற்றியோ அவைகளுக்குத் தலைவரால் அளிக்கப்பட்ட பதில்களைப் பற்றியோ எவ்வித விவாதமும் கூடாது. கேள்விகளும் பதிலும் நடவடிக்கைப் புத்தகத்தில் பதிவு செய்து கொள்ளப்பட வேண்டும். இவ்விதிகளில் 'தலைவர்' என்பதில் தலைவருடைய அலுவல்களை இச்சட்டப்படி செய்பவர்களும் சேர்ந்தவர்களே.

பஞ்சாயத்து 'மீட்டிங்'கில் தீர்மானங்கள் கொண்டு வருவது எப்படி?

இதைப் பற்றியும் 27-3-51 தேதியுள்ள அறிக்கை 8 (2)ல் சில விதிகள் இருக்கின்றன. அவையாவன:—பஞ்சாயத்துக் கூட்டத்தில் ஒரு விஷயத்தைப் பற்றி ஒரு தீர்மானம் செய்ய வேண்டுமென்று அபிப்பிராயப்படும் மெம்பர் அத்தீர்மானத்தை எழுதி, தாம் அத்தீர்மானத்

தைக் கொண்டு வரப்போவதாக மீட்டிங் நடக்கக் குறைந்தது 10 நாட்களுக்கு முன்பே தலைவருக்கு அறிவிக்க வேண்டும். ஆனால் தலைவர் இஷ்டப்பட்டால் 10 நாள் நோட்டீஸ் இல்லாத தீர்மானங்களையும் நிகழ்ச்சிக் குறிப்பில் சேர்த்துக் கொள்ளலாம். தீர்மானங்கள் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி வியக்தமாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும்; அவைகளில் வாத பிரதிவாதங்களோ, ஊகங்களோ, பரிகாசங்களோ, அவதூறுகளோ இருக்கக் கூடாது; உத்தியோக தோரணைக்குச் சம்பந்த மில்லாமல் ஒருவருடைய நடத்தையைப் பற்றியோ குணங்களைப்பற்றியோ தீர்மானங்கள் இருக்கக் கூடாது. சட்டத்திற்கும் விதிகளுக்கும் மாறாக இருக்கும் தீர்மானங்களைத் தலைவர் ஏற்றுக் கொள்ள மறுக்கலாம். ஆனால் அப்பஞ்சாயத்தில் சம்பந்த மில்லாத தீர்மானங்கள் ரசாபாசமான அல்லது ஜாதி சம்பந்தமான பிரச்னைகளை எழுப்பக் கூடியவை என்று தலைவருக்குத் தோன்றினால், அவர் அத்தீர்மானத்தை இன்ஸ்பெக்டருக்குத் தெரிவித்து அதை ஏற்றுக் கொள்வதா கூடாதா என்று இன்ஸ்பெக்டர் செய்யும் தீர்மானப்படி செய்ய வேண்டும். ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானங்கள் எல்லாம் மீட்டிங்கைப்பற்றி மெம்பர்களுக்கு அனுப்பப் படும் நிகழ்ச்சிக் குறிப்பு நோட்டீசில் காணப்பட வேண்டும். மீட்டிங் நடக்கும் போது அத்தீர்மானத்தை யார் கொண்டு வந்திருக்கிறாரோ அந்த மெம்பர் கூப்பிடப் படுவார். அப்படிக் கூப்பிடப்பட்டவுடன் அம்மெம்பர் தாம் கொண்டு வந்த தீர்மானத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளலாம்; அல்லது அதை பிரேரேபிக்கலாம். (Move the resolution) வாபஸ் வாங்கிக் கொண்டால் 'வாபஸ் வாங்கிக் கொண்டேன்' என்று சொல்வதைத் தவிர வேறு விவாதங்கள் ஒன்றும் கூடாது. ஒரு மெம்பர் பெயரால் இருக்கும் தீர்மானத்தைப் பொறுத்து அம்மெம்பர் முன் சொன்னபடி கூப்பிடப்பட்டவுடன் அவர் அதை வாபஸ் வாங்கிக் கொண்டாலும், அல்லது அவர் அக்கூட்டத்திற்கே வராமல் இருந்தாலும், அல்லது கூட்டத்திற்கு வந்து தாம் அத்தீர்மானத்தைப் பிரேரேபிக்க இஷ்டப்படாமலிருந்தாலும், அல்லது அக்கூட்டத்திற்கு முன்பே அவர் தம் மெம்பர் பதவியை இழந்துவிட்டாலும், அங்கே ஆஜராகி இருக்கும் வேறு எந்த மெம்பரும் அத்தீர்மானத்தைப் பிரேரேபிக்க உரிமை உண்டு. அவ்விதமான தீர்மானத்தை வேறு எந்த மெம்பரும் பிரேரேபிக்காவிட்டால் அத்தீர்மானம் வாபஸ் ஆனதாகப் பாவிக்கப்படும்.

ஒரு தீர்மானத்தை ஒரு மெம்பர் பிரேரேபித்த பிறகு அதை ஒரு மெம்பர் ஆமோதிக்க (Second) வேண்டும். இல்லாவிட்டால் அத்தீர்மானத்தைப் பற்றி ஒருவரும் விவாதிக்கக் கூடாது. தலைவருடைய அனுமதியின்றி எந்த மெம்பரும் ஒரு தீர்மானத்தைப்பற்றி 15 நிமிஷங்களுக்கு மேல் பேசக்கூடாது; ஆனால் அத்தீர்மானத்தைப் பிரேரேபிப்பவர் மட்டில் 30 நிமிஷங்கள் வரை பேசலாம். ஒரு தீர்மானத்தில் சம்பந்தப்பட்ட விஷயங்களைத் தவிர வேறு அனாவசியமான விஷயங்களைப் பற்றி அப்பொழுது பேசக்கூடாது. ஒரு தீர்மானத்தைப்பற்றிய விவாதம் நடந்து கொண்டிருக்கும் போது அதற்குத் திருத்தங்கள் (amendments) கொண்டு வர எந்த மெம்பருக்கும் உரிமை உண்டு. ஒரு தீர்மானத்தைப் பிரேரேபித்தவரோ, ஆமோதித்தவரோ பஞ்சாயத்துக் கூட்டத்தின் அனுமதியின்றி அதை வாபஸ் வாங்கிக் கொள்ள முடியாது. வாபஸ் வாங்கிக்கொள்வதைப் பற்றித் தலைவர் அனுமதித்தாலொழிய எவ்வித விவாதமும் கூடாது. பஞ்சாயத்துக் கூட்டத்தின் அபிப்பிராயத்தைக் கேட்கும் முன்பு அத்தீர்மானத்தின் வாசகத்தையும், திருத்தங்களின் வாசகங்களையும் தலைவர் வாசித்துக் காண்பிக்க வேண்டும். திருத்தங்களைப்பற்றி ஒவ்வொன்றாய் வரிசைக்கிரமமாய் எடுத்து, பஞ்சாயத்தார்களின் அபிப்பிராயத்தைத் தலைவர் கேட்கவேண்டும். திருத்தங்கள் எல்லாம் தோற்றுப்போய் விட்டால் கடைசியில் அசல் தீர்மானத்தைப் பற்றித் தலைவர் 'ஓட்' எடுப்பார். அதாவது, மெம்பர்களின் அபிப்பிராயங்களைக் கேட்பார். ஆனால் அசல் தீர்மானத்தையும் திருத்தங்களையும் வேறு தமக்கு யுக்தமாகத் தோன்றும் வரிசையிலும் எடுத்து மெம்பர்களின் அபிப்பிராயங்களைக் கேட்கத் தலைவருக்கு உரிமை உண்டு. ஒரே தீர்மானத்தில் பல விஷயங்கள் இருந்தால் அவைகளைப் பற்றி ஒவ்வொன்றாய் அபிப்பிராயம் கேட்கவும் தலைவருக்கு அதிகாரம் உண்டு. இவ்விதிகளிலும் 'தலைவர்' என்பது தலைவரின் வேலைகளைச் சட்டப்படி செய்பவர்களையும் குறிக்கும்.

பஞ்சாயத்துத் தலைவர், உபதலைவர் மெம்பர்கள் ஒருவருக்கும் சம்பளம் கிடையாது.

ஒரு பஞ்சாயத்தின் தலைவரோ உபதலைவரோ மெம்பர்களோ செய்யும் எவ்வித வேலைகளுக்கும் அப்பஞ்சாயத்தின் நிதிகளிலிருந்தோ அல்லது அப்பஞ்சாயத்தால் நிர்வகிக்கப்படும் நிதிகளி

செக்ஷன் 37

லிருந்தோ எவ்விதமான சம்பளமாவது வெகுமதியாவது அடையக்கூடாது.

நிர்வாக உத்தியோகஸ்தர்.

['நிர்வாக அதிகாரி' (Executive Authority) என்பது எக்சிகூடிவ் ஆபீசர் என்ற நிர்வாக உத்தியோகஸ்தர் (Executive Officer) நியமிக்கப்படும் பஞ்சாயத்துக்களில் அவரைக் குறிக்கும். அவ்வித உத்தியோகஸ்தர் நியமிக்கப்படாத பஞ்சாயத்துக்களில் அப்பஞ்சாயத்தின் தலைவர்தான் நிர்வாக அதிகாரியாவார். கீழே சொல்லப்பட்டிருக்கிறது நிர்வாக உத்தியோகஸ்தரைப் (Executive Officer) பற்றியவை.]

செக்ஷன் 28

சில குறிப்பிட்ட பஞ்சாயத்துக்களுக்கு நிர்வாக உத்தியோகஸ்தர் நியமிக்கப்படவேண்டுமென்று அறிக்கை மூலம் உத்தரவிடச் சர்க்காருக்குத் தான் அதிகாரம். அவ்விதமான பஞ்சாயத்துக்கு ஒரு நிர்வாக உத்தியோகஸ்தரை, சர்க்காரே நியமிப்பார்கள். நிர்வாக உத்தியோகஸ்தர் ஒரு முழுநேர வேலை செய்ய வேண்டிய உத்தியோகஸ்தராக இருப்பார். இவர் சர்க்கார் அனுமதியின்றி, வேறு எவ்வித வேலைகளையும் மேற்கொள்ளக் கூடாது. அவ்விதம் ஒரு முழுநேர நிர்வாக உத்தியோகஸ்தர் இருக்க வேண்டுமென்று அறிக்கையிடப்படாத பஞ்சாயத்துக்களிலும், அவ்விதம் அறிக்கையிடப்பட்டும் யாதொரு நிர்வாக உத்தியோகஸ்தரும் பொறுப்பில் இல்லாத போது அப்பஞ்சாயத்துக்களிலும், பஞ்சாயத்துத் தலைவரே நிர்வாக உத்தியோகஸ்தருடைய வேலைகளைப் பார்க்க வேண்டியது அவருடைய கடமையாகும். இதற்காக விதிகள் ஏற்படும். நிர்வாக உத்தியோகஸ்தருடைய சம்பளமும் உபகாரச் சம்பளமும் எவ்வளவு என்று சர்க்கார் தான் நிர்ணயம் செய்வார்கள். ஆனால் அத்தொகைகளைப் பஞ்சாயத்தே தான் அவருக்குக் கொடுக்க வேண்டும். இவை தவிர, நிர்வாக உத்தியோகஸ்தர் ஒரு சர்க்கார் ஊழியராகவே இருந்தால் அவருடைய லீவுச் சம்பளம் பென்ஷன், பிராவிடண்ட் பண்ட் முதலியவைகளுக்கும் சர்க்கார் விதிகளின்படி பஞ்சாயத்தே தொகைகள் கொடுத்துவர வேண்டும். அவர் சர்க்கார் ஊழியராக இல்லாவிட்டாலும் இதற்காக ஏற்படும் விதிகளின்படி அவருடைய லீவுச் சம்பளம், பென்ஷன், பிராவிடெண்ட் பண்ட் முதலியவைகளுக்காகப் பஞ்சாயத்தே தொகைகள் கட்டிவரவேண்டும்.

நிர்வாக உத்தியோகஸ்தர்களைத் தனுச வாரியாகப் பிரிப்பது பற்றியும் அவர்களை நியமிப்பது பற்றியும், வேலைசம்பந்தமான நிபந்தனைகள், சம்பளம், உபகாரச் சம்பளம், அவர்களுடைய ஒழுக்கம் நடத்தை முதலியவை பற்றியும் விதிகள் செய்யச் சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது.

நிர்வாக உத்தியோகஸ்தரின் உரிமைகளும் கடமைகளும்.

செக்ஷன் 29

ஒரு பஞ்சாயத்து மீட்டிங் நடக்கும்போதோ, அல்லது பஞ்சாயத்துக் கமிட்டி மீட்டிங் நடக்கும்போதோ அதில் கலந்துகொள்ளவும், விவாதங்களில் பங்கெடுத்துக் கொள்ளவும் நிர்வாக உத்தியோகஸ்தருக்கு உரிமை உண்டு. ஆனால் அவருக்கு எவ்விதமான தீர்மானங்கள் கொண்டு வரவும், 'வோட்' கொடுக்கவும் உரிமை இல்லை. மேலும் ஒரு பஞ்சாயத்தின் மீட்டிங்குக்கோ கமிட்டியின் மீட்டிங்குக்கோ நிர்வாக உத்தியோகஸ்தர் வர வேண்டுமென்று சட்டாயப் படுத்தப் பஞ்சாயத்துத் தலைவருக்கு அதிகாரமுண்டு.

பஞ்சாயத்தின் தீர்மானங்களின்படி நடைமுறையில் செய்ய வேண்டியது நிர்வாக உத்தியோகஸ்தரின் கடமையாகும். ஆனால் ஒரு குறிப்பிட்ட தீர்மானமானது சட்டப்படி நிறைவேற்றப் பட்டதல்ல என்றோ, அல்லது சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட வரம்பை மீறுகின்றதென்றோ, அல்லது அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அது ஜனங்களுடைய உயிருக்கோ ஆரோக்கியத்திற்கோ அபாயம் விளைவிக்கக் கூடியதென்றோ, பொது பந்தோபஸ்துக்குப் பங்கம் ஏற்படக் கூடியதென்றோ தலைவருக்குத் தோன்றினால், அதைப்பற்றி நிர்வாக அதிகாரி சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டும். சர்க்கார் இது விஷயமாகச் செய்யும் உத்தரவுப்படி அவர் நடக்க வேண்டும். இது விஷயமாய், சர்க்கார் செய்யும் தீர்மானமே முடிவானது. பஞ்சாயத்தின் மற்ற உத்தியோகஸ்தர்களும், சிப்பந்திகளும் நிர்வாக உத்தியோகஸ்தருக்கு உட்பட்டவர்களே.

[தொடரும்]

பஞ்சாயத்து மெம்பர்களின் பதவி காலம் நீடிப்பு.

இப்போது 1—4—1952-ல் முடியும் பஞ்சாயத்து மெம்பர்களின் பதவி காலம் 2—7—1952வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. (25–3–1952 சென்னை சர்க்கார் கெஜட்-I A—170.)

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUBUVANAM, TIRUVIDAIMARUDUR, AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. Editor:—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.

சிவில் கோர்ட்டுகளின் கோடை விடுமுறை நாட்கள்.

[குறிப்பு:-ஆரம்ப தேதி, முடிவு தேதி இரண்டு நாட்களும் விடுமுறைக்குட்பட்டவைகளே.]

சென்னை ஹைகோர்ட்: 28—4—1952 முதல் 4—7—1952 முடிய.

செங்கல்பட்டு ஜில்லா: ஜில்லா கோர்ட்டுக்கும் செங்கல்பட்டு சப்கோர்ட்டுக்கும் 21—4—52 முதல் 12—6—52 முடிய. செங்கல்பட்டு, காஞ்சீபுரம், பூந்தமல்லி, திருவள்ளூர் டி. மு. கோர்ட்டுகளுக்கும் செங்கல்பட்டு ஸ்மால்காஸ் கோர்ட்டுக்கும் 10-5-1952 முதல் 12—6—1952 முடிய.

வட ஆற்காடு ஜில்லா: வேலூர் ஜில்லா கோர்ட்டுக்கும், சப்கோர்ட்டுக்கும் 21-4-1952 முதல் 12—6—1952 முடிய. வேலூர், ஆரணி, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை டி. மு. கோர்ட்டுகளுக்கும் வேலூர் ஸ்மால்காஸ் கோர்ட்டுகளுக்கும் 21—4—1952 முதல் 24—5—1952 முடிய.

தென் ஆற்காடு ஜில்லா: ஜில்லா கோர்ட்டுக்கும் சப் கோர்ட்டுக்கும் 21—4—1952 முதல் 12—6—1952 முடிய.

கடலூர் ஸ்மால்காஸ் கோர்ட், டைடிஷனல் கோர்ட், கடலூர், சிதம்பரம், விருத்தாசலம், விழுப்புரம், திருக்கோயிலூர், திண்டிவனம், கள்ளக்குறிச்சி டி. மு. கோர்ட்டுகளுக்கு 21—4—1952 முதல் 24—5—19:2 முடிய.

கிழக்குத் தஞ்சாவூர் ஜில்லா: நாகபட்டிணம் ஜில்லா கோர்ட்டுக்கும் மாயூரம் சப்கோர்ட்டுக்கும் 21—4—1952 முதல் 13—6—1952 முடிய. மாயூரம், நாகபட்டிணம், சீர்காழி, திருத்துரைப்பூண்டி, திருவாரூர் டி. மு. கோர்ட்டுகளுக்கும் நாகபட்டிணம் ஸ்மால்காஸ் கோர்ட்டுக்கும் 21—4—1952 முதல் 25—5—1952 முடிய.

மேற்குத் தஞ்சாவூர் ஜில்லா: ஜில்லா கோர்ட்டுக்கும் தஞ்சாவூர், கும்பகோணம் சப் கோர்ட்டுகளுக்கும் 21—4—1952 முதல் 12—6—52 முடிய.

கும்பகோணம், மன்னார்குடி, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், திருவையாறு, வலங்கைமான் டி. மு. கோர்ட்டுகளுக்கு தஞ்சாவூர் ஸ்மால்காஸ் கோர்ட்டுக்கும் 10—5—1952 முதல் 12—6—52 முடிய.

திருச்சிராப்பள்ளி ஜில்லா: திருச்சி ஜில்லா கோர்ட்டுக்கும், திருச்சி, புதுக்கோட்டை சப் கோர்ட்டுகளுக்கும் 21—4—1952 முதல் 13—6—1952 முடிய.

திருச்சி ஸ்மால்காஸ் கோர்ட், அரியலூர், கரூர், குழித்தலை, திருச்சிராப்பள்ளி, துறையூர், புதுக்கோட்டை டி. மு. கோர்ட்டுகளுக்கு 21—4—1952 முதல் 26—5—1952 முடிய.

மதுரை ஜில்லா: மதுரை ஜில்லா கோர்ட்டுக்கும், மதுரை, திண்டுக்கல் சப்கோர்ட்டுகளுக்கும் 21—4—1952 முதல் 12—6—52 முடிய.

மதுரை டவுன் ஸ்மால்காஸ் கோர்ட்டுக்கும், திண்டுக்கல், கொடைக்கானல், மதுரை தாலூக்கா, மதுரை டவுன், மேலூர், பழனி, பெரியகுளம், திருமங்கலம் டி. மு. கோர்ட்டுகளுக்கும் 21—4—52 முதல் 24—5—52 முடிய.

ராமநாதபுரம் ஜில்லா: ராமநாதபுரம் ஜில்லா கோர்ட்டுக்கும் தேவகோட்டை, ராமநாதபுரம், சிவகெங்கை சப்கோர்ட்டுகளுக்கும் 21—4—52 முதல் 12—6—52 முடிய.

தேவகோட்டை, மானாமதுரை, பரமக்குடி, ராமநாதபுரம், சாத்தூர், சிவகெங்கை, ஸ்ரீவில்லிபுத்தூர் டி. மு. கோர்ட்டுகளுக்கு 21—4—1952 முதல் 24—5—1952 முடிய.

திருநெல்வேலி ஜில்லா: திருநெல்வேலி ஜில்லா கோர்ட்டுக்கும், திருநெல்வேலி, தூத்துக்குடி சப் கோர்ட்டுகளுக்கும் 21—4—52 முதல் 12—6—1952 முடிய. எல்லா டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளுக்கும் 21-4-1952 முதல் 24—5—52 முடிய.

கோயமுத்தூர் நீலகிரி ஜில்லாக்கள்: கோயமுத்தூர் ஜில்லா கோர்ட்டுக்கும், கோயமுத்தூர் சப் கோர்ட்டுக்கும், நீலகிரி சப் கோர்ட்டுக்கும், கூடலூர் டி. மு. கோர்ட்டுக்கும் 21—4—1952 முதல் 12—6—1952 முடிய.

கோயமுத்தூர், தாராபுரம், ஈரோடு, கோபிசெட்டிப்பாளையம், கொள்ளேகாலம், திருப்பூர், உடுமலைப்பேட்டை டி. மு. கோர்ட்டுகளுக்கு 21—4—1952 முதல் 24—5—1952 முடிய.

சேலம் ஜில்லா: சேலம் ஜில்லா கோர்ட்டுக்கும், சப் கோர்ட்டுக்கும் 21—4—1952 முதல் 14—6—52 முடிய.

சேலம், சங்ககிரிதுர்க்கம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி டி. மு. கோர்ட்டுகளுக்கும் சேலம் அடிஷனல் ஸ்மால்காஸ் கோர்ட்டுக்கும் 21—4—52 முதல் 26—5—52 முடிய.

Regd. No. M. 5399 "THE VAKIL"

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

REGISTERED TRADE MARK

பிராஞ்சு: (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத்தைலம்
கோகுல் கூந்தல் தைலம்

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

SOLE AGENTS:

For Madras
SURAJ AGENCIES
MADRAS

For Coimbatore, Palghat & Nilgiris
B. BALAPATTABI CHETTIAR,
246, VYSYAL STREET, COIMBATORE.

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, TIRUBUVANAM, TRB.